ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1--12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஞு தை-மீ 10-உ (22—1—1933) | மலர் 39.

கடவுளையும், காங்கிரசையும் ஒழிப்பது
பார்ப்பனீயத்தையும், சோம்பேறி
வாழ்க்கையையும் ஒழிப்பதாகும்.



மதங்களையும், தேசியங்களையும் ஒழிப்பது
முதலாளித்தன்மையையும், ஏகாதிபத்திய
த்தையும் ஒழிப்பதாகும்.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் ஐரோப்பா சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வந்த சமயம், கண்டி மருத்துவ சங்கத்தார் அளித்த வரவேற்பின் போது எடுத்த படம்.

தொழிலாளர் துயரம்.

(வித்வான், ஆர். எஸ். மயில்சாமி.)

கும்மி.

வெள்ளைக்காரன் கொள்ளை வேரறுப்போமென்று
வீரம் பேசும் பெரு வாயரெலாம்—ஒரு
வேலைக்காரன் பாட்டை வீணிலுண்ணல் மாய
வித்தையா லல்லவோ தோழர்களே. (1)

பஞ்சைக ளல்லும் பகலு முழைத்திடப்
பலனைக் கரப்பவன் பணக்காரன்,—பசியாற்
பஞ்சைய ழுகவும் பணக்காரன் கொழுக்கவும்
பார்ப்பதோ தேசியம் தோழர்களே. (2)

முழங்கால் சேற்றினில் முக்கி விளைத்தவன்
மூடச் சகோதரன் "பள்ளப் பயல்"—அதை
மூக்குக்கும்நாக்குக்கும் தண்ணீர்காட்டித்தின்னும்
மோசக்காரன் மேலோ தோழர்களே. (3)

ஊழியக் காரர்தம் உதிரந் திரண்டன்றோ
ஒன்றுபத் தாயிரம் மாளிகைகள்—அந்த
ஊதியக் காரர்கள் ஒண்ட இடமின்றி
ஓலமிட் டழுகின்றார் தோழர்களே. (4)

ஐயோ 'கூழில்லை என்றே யழுபவன்
அல்லும் பகலும் உழைத்தவன் காண்—இன்று
அட்டியின் றிச்சோதா ஐயனுந் தின்பது
அக்கார வமுதன்றோ! தோழர்களே. (5)

அகப்பை செய்யத் தெரி யாதான் தேர்வேலைக்
கச்சாரம் வாங்கும் கதைபோல—இந்த
அல்லலகற்ற வழியறி யார்சுய
ஆட்சியும் செய்வாரோ தோழர்களே. (6)

அண்டப் புரட்டர்கள் ஏழைகள் பேர்சொல்லி
ஆகாயக் கோட்டைகள் கட்டுகின்றார்—ஏழைக்
காகாயக் கோட்டையும் ஆர நிழலாமோ
ஆராய்ந்து சொல்லுவீர் தோழர்களே. (7)

இந்தியாவின் குறைபாடுகள்.

The Crux of the Indian Problem

என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.

இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சீர்கேடு, மதம், மதபுத்தகங்களும் அவற்றிலுள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மனம், ஒழுக்கம், சோதிடமும் சகுனமும், முதலியனபற்றிய ஆராய்ச்சியும், கண்டனங்களும்நிறைந்த கட்டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற மணிவாசகங்கள், இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவதவசியம். முகவுரை, முடிவுரையுடன் 160 பக்கங்களுக்கு மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் விளக்கப்பட்டுளளது.

இதன் விலை அணா ... ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0
மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

"கடவுளும், பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

"SUPERSTITION OF KHADI"

A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.

Price annas. 0.2.0

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அரிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது.

பிரதி ஒன்றுக்கு விலை அணா. 0—6—0

நாஸ்திகன்

C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சிபுரம்.

193? ௵ காலண்டர் இனாம்!

மதன காமேஸ்வரி லேகியம்.

பெயர்பெற்ற மலபார் கஞ்சா தாது புஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1-க்கு ரூ. 8. தபாற் சிலவு அணா 8. சேட்லாக் இனாம்.

சித்தௌஷதவைத்தியசாலை, A. போஸ்டு, புல்லச்சேரி, தென் மலையாளம்.

'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. நைனா.

வருஷ சந்தா—2—8—0

விலாசம்—சமத்வபோதினி டிக்கோயா சிலோன்.

குருட்டு நம்பிக்கைக்கு ஆதாரம் கும்பகோண மகாமகம்.

ஜார்ஜ் பர்னாட்ஷா.

அமெரிக்கா சொற்பொழிவு.

ஓ எனதன்புள்ள அமெரிக்காவே!

ஓ அமெரிக்க நண்பர்களே!

என்னை ரஷியப் பித்துப் பிடித்தவன் என்று கூறிக்கொண்டுதிரியும் மேதாவிகளே!

உங்கள் நாட்டின் தற்கால உண்மை நிலைமை நீங்கள் சரியாக உணர்ந்திருப்பீர்களேயானால் என்னைப்பற்றி அம்மாதிரி ரஷியப்பித்துக்கொண்டவன் என்று பிதற்றி இருக்கமாட்டீர்கள்.

ரஷியா நம்மைப்பார்த்து சிரிக்கின்றது.

ரஷியா நம்மையெல்லாம் முட்டாள்களாக்கிவிட்டது.

அதன் முன்னேற்றத்தில் நம்மை வெகுதூரம் பின்தள்ளி தோற்கடித்துவிட்டது.

நம்மை, நாமே, வெட்கித்தலைகுனியும்படியும் செய்துவிட்டது.

இவ்வளவோடு நில்லாமல், நமது வண்டவாளங்களையெல்லாம் உலகமறிய வெளியாக்கிவிட்டது.

இனி என்ன செய்யவேண்டியது பாக்கியாக இருக்கின்றது? என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

உலகத்தில் நம்மைவிட ஒழுக்கத்தில் சிறந்தவர்கள் கிடையாது என்று மலை உச்சியில் ஏறி ரஷ்யாவுக்கு ஞானோபதேசம் செய்தோம்.

ஆனால் இப்போது அந்தக்காலம் மலையேறிவிட்டது. எப்படியெனில் நாம் இன்று ரஷியாவைக்கண்டு நாணி—வெட்கி—முக்காடிட்டுக்கொண்டதுடன் மறைந்துகொள்ள மலைச்சரிவில் புதர்களைத்தேடுகின்றோம்.

நாம் ரஷியாவை கடவுள் தன்மையற்ற நாஸ்த்திக தேசம் என்று குற்றம் சாட்டி பரிகசித்தோம்.

ஆனால் இன்று அந்த ரஷ்யாவானது உலகத்தில் உள்ள எல்லாக் கடவுள்களுடையவும் அருளுக்கும், கருணைக்கும் பாத்திரமாகி அவற்றின் அருள் முழுவதையும் தானேபெற்று ஜெகஜ்ஜோதியாய் விளங்குகின்றது.

நாமோ, அக்கடவுள்களின் கோபத்திற்கு ஆளாகி பிழைக்க வழியற்று, ஒண்டுவதற்கு நிழலில்லாமல் திண்டாடுகின்றோம்.

மனித அபிமானத்தின்மேல் நிலையைப்பெற்றுவிட்டதாகவும், உலகில் நாமேமிக ஜீவகாருண்யம் உள்ளவர்கள் என்றும், மனித சமூக நன்மைக்கு வேண்டிய தொழில் முறைகளையெல்லாம் ஏற்படுத்தியாய் விட்டதென்றும் ஜம்பத்தின் மேல் ஜம்பம் அடித்துக்கொண்டிருந்தோம்.

இதற்காக மக்கள் பட்டினியால் வாடுவதையும், வேலையில்லாமல் திரிவதையும், தெரியாதவர்கள்போல் நடித்துவந்தோம்.

இவற்றின் பயன் எல்லாம் முடிவில் நாம்தான் ஓட்டாண்டி (பாப்பர்) ஆக நேர்ந்தது.

இதைக்கண்ட ரஷியா குதித்துக் குதித்து கெக்கலிகொட்டி சிரிக்க நேர்ந்தது. இதுதான் நமது ஜம்பத்தால் ஏற்பட்டபயன்.

உங்கள் (அமெரிக்கா) நாட்டுக் குடி அரசுத் தலைவரோ "மகா யுத்த காலத்தில் ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து மக்களை விடுவித்து, பட்டினிகிடந்து உழலும் ஐரோப்பிய மக்களுக்கு உணவளித்துக் காப்பாற்றியவர்" என்றதான பெரும் புகழைப் பெற்றவர்.

ஆனால் அப்படிப்பட்ட அவர், இன்று அவரது (அமெரிக்கா) நாட்டிலேயே பட்டினியால் சாகும் பத்துலட்சக்கணக்கான மக்களுக்கு உயிர்த்தண்ணீர்விடக்கூட மார்க்கமில்லாமல் திண்டாடித்திகைக்கவேண்டியவராய் இருக்கிறார்.

உங்கள் நாட்டு கோடீஸ்வரர்களான செல்வவான்களோ "ஐயோ பணமே கையைவிட்டுப்போகின்றாயே" என்று கூப்பாடு போடும் ஓசையானது உலகமெல்லாம் எதிரொலிகிளம்பும்படி செய்வதுடன், இங்கிலாந்திலுள்ள பாங்கிகளையெல்லாம் தீபாவளியாக்கி மூடும்படி செய்துவிட்டது.

இதுமாத்திரமல்லாமல் இங்கிலாந்துதேச அரசாங்க நிர்வாக (பட்ஜட்) வரவு செலவு திட்டத்தில் எட்டரைக்கோடி டாலர் (முப்பது கோடி ரூபாய்) போராமல் துண்டுவிழுந்து கடன்வாங்கித்தீரவேண்டிய நிலைமைக்குகொண்டுவந்துவிட்டது.

இப்படிச்செய்ததின் மூலம் உங்கள் (அமெரிக்கா) தேசமாவது வாழ்ந்ததா என்று பார்த்தால் அப்படியும் இல்லாமல் இந்த வருஷத்திய அமெரிக்க வரவு செலவு (பட்ஜட்) திட்டத்தில், எங்களை (இங்கிலாந்தை விட, ஐந்து பங்கு அதிகமாய் அதாவது நாற்பத்தி ஐந்துகோடி டாலர் (நூற்றி அறுபது கோடி ரூபாய்) போராமல் துண்டு விழுந்து இருக்கிறது.

எங்களுடைய (இங்கிலாந்து) தேச முதலாளிகள் முப்பது லட்சம் ஜனங்களை தொழில் இல்லாமல் தெருவில் திண்டாடித்திரியும்படி செய்திருக்கிறார்கள்.

உங்களுடைய (அமெரிக்கா) தேச முதலாளிகள் அறுபது லட்சம் பேர்களை தொழில் இல்லாமல் திண்டாடித்தெருவில் திரியும்படி செய்திருக்கிறார்கள்.

இருதேசத்துராஜதந்திரிகளும் (அரசியல் தலைவர்களும்) பசியால் வாடிக்கூக்குரல் இடுகின்றவர்களைத் தடியால் தாக்கிப்பசியை அடக்கப் பார்க்கின்றார்கள்.

அல்லது அரைவயிற்றுக்குக்கூட போராத அளவு பிச்சைகொடுப்பதுபோல் ஏதோ பிரமாதமாய் தர்மம் செய்வதுபோல் நடித்து நொடித்துக் கொடுக்க யோசிக்கின்றார்கள்.

நமது விவசாயங்களும் நாசமாய்ப் போய்விட்டது.

நமது தொழில் முறைகள் எல்லாம் அளவுக்கு மீறின உற்பத்தியால் மோதுண்டு சிதைந்துபோய் விட்டன. ஏனெனில் அவற்றால் கிடைக்கும் லாபங்களை சரியானபடி பயன்படுத்தாததினால் தாயே பிள்ளையின் கழுத்தை திருகிக்கொன்றது போல், லாபமே தொழில்முறையைக் குலைத்துவிட்டது.

ஆகவே, நாமே மிக புத்திசாலிகள் என்று பெருமை பாராட்டிக்கொண்டிருந்த நமது நாடானது, தொழில் திறமை இல்லாமையால் மக்களுக்கு வேலை இல்லாமையும், அரசியல் திறமை இல்லாமையால் வரவு செலவு திட்டத்தில் பணம் போராமையும், பொருளாதாரத்திறமை இல்லாததால் நாட்டில் பணப்பஞ்சமும் ஆகியவைகளால் அல்லல்படுகின்றது.

ஆனால் ரஷியாவோ அதன் வரவு செலவு திட்டத்தில் ஏழரைக்கோடி டாலர் (இருபத்தி ஆறு கோடிரூபாய்) மீதியாக இருக்கவும் அங்குள்ள எல்லா ஆணுக்கும், பெண்ணுக்கும் தாராளமாய் வேலை இருக்கும்படியாகவும், அதன் சாஸ்திரீய விவசாய முறை முற்போக்கானது முன்னிலும் இரண்டு பங்கு, மூன்று பங்கு அதிகமான வெள்ளாமை பலன் கொடுக்கக்கூடியதாகவும், இடரி விழுந்தால் தொழிற்சாலைகளின் மேலேயே விழும்படியான அவ்வளவு எங்கு பார்த்தாலும் தொழிற்சாலை மயமாகவே விளங்கும்படி பெருகவும் நிபுணத்துமான நிர்வாக ஆட்சி செய்யத்தக்க மேதாவிகளும் வேறு எந்த நாகரிக நாட்டிலும் இல்லாத அளவு ஏழைஜனங்களும்—பாமர ஜனங்களுமாய் இருந்தவர்கள் தங்கள் வாழ்வைப்பற்றி கவலையற்று நம்பிக்கையும், உறுதியும், ஜவாப்புதாரித்தனமும் கொண்டு நிம்மதியாய் நிர்சிந்தையாய் வாழும் தன்மையும் தாண்டவமாடுகின்றன.

இந்த நிலைமை கொண்ட ரஷியர்கள் நம்மைப்பார்த்து சிரித்து பரிதாபப்பட்டு "ஓ வடிகட்டின அடிமுட்டாள்களே" என்று மரியாதைப் பட்டம் கொடுத்து அழைத்து "நீங்கள் ஏன் எங்களைப்பின்பற்றி நாங்கள் நடக்கின்றமாதிரி நடக்கவில்லை. உங்கள் நாட்டு மக்களுக்கு வேலை கொடுக்கவும், சாப்பாடு போடவும், உங்களுக்கு யோக்கியதை இல்லாவிட்டால்—உங்களால் முடியாவிட்டால் (யோக்கியதை இல்லை) அவர்களை எங்களிடம் அனுப்புங்கள். அவர்கள் எந்த வேலைக்குத்தகுதி உடையவர்களோ அந்த வேலையைக் கொடுத்து உணவளித்துக் காப்பாற்றுகின்றோம்.

மற்றும் உங்கள் தேச மக்களைப்பட்டப்பகலில் நடுத் தெருவில் கொள்ளைகள் அடிப்பதில் இருந்தும், கொலைகள் செய்வதில் இருந்தும், தடுத்துக் காப்பாற்ற உங்களால் முடியவில்லையானால் அப்படிப்பட்டவர்களையும், எங்களிடம் அனுப்புங்கள். அவர்களையும் எல்லாம் திருத்தி, நற்புத்தி உண்டாக்கி, அவர்களால் உங்களுக்கு என்றும் எவ்வித தொல்லையும் இல்லாதபடி செய்விக்கின்றோம். ஒரு சமயம் எங்களாலும் அவர்களை திருத்த முடியாவிட்டால் பிறகு அவர்களால் உலகில் எவருக்குமே எவ்வித தொந்திரவும் உண்டாகாதபடி செய்துவிடுவோம்" என்று வீரகர்ச்சனை செய்கின்றது. நாமோ இதற்கு எவ்வித பதிலும் சொல்ல முடியாமல் பேந்தப்பேந்த விழிக்கின்றோம். "இது என்ன புதுமை" என்று ஏங்கி மலைக்கின்றோம்.

ஆனால் இவற்றையெல்லாம் கண்டும், கேட்டும், மலைப்புற்றிருக்கும் உங்களுக்கு ஒரு ஆறுதல் இருக்கின்றது. அதென்னவென்றால் இன்றைய தினம் ரஷ்யர்கள் செய்யும் இந்த அதிஅற்புதமான மேற்கண்ட செயல்களுக்கெல்லாம் ஆதிகாரணஸ்தர்கள் உங்கள் அமெரிக்கர்கள் தான் என்பதும், அவர்கள் தான் 50 வருஷங்களுக்கு முன்பே இந்தக் கொள்கைகளை எடுத்துக்காட்டியவர்கள் என்பதும், அதற்காக பல அமரிக்கர்கள் சிறை சென்று கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என்பதுமேயாகும்.

நான் ஒரு அமெரிக்கனல்ல. ஆனால் அதைவிட மோசமான ஐரிஷ் தேசத்தவன். எனது சிறுவயதில் ஹென்றி ஜார்ஜ் என்னும் ஒருவரால் ஆச்சரியப்படத்தக்க வண்ணம் என் கண்கள் திறக்கப்பட்டதுடன், அவரது வழியையே பின்பற்றவேண்டும் என்ற எண்ணமும் உதித்தது. அதன் பயனாய் கார்ல் மார்க்ஸ் என்னும் ஒரு ஜர்மனி யூதப் பெரியாரைப்பற்றினேன். அதிலிருந்து என் கண்களுக்கு மிகுதியும் அதிகமான பிரகாசம் ஏற்பட்டன. (அதாவது மேற்கண்ட இருவர்களால் எழுதப்பட்ட புஸ்தகங்களைப்படித்துப்பார்த்ததால் இக்கொள்கைகளைப்பற்றியதெளிவு ஏற்பட்டது என்பது கருத்து மொ-ர்)

இதன் பயனாய் நான் கண்ட உண்மை என்னவென்றால் முதலாளித்துவத்தினால் மனிதன் கொஞ்ச காலத்துக்கு செல்வத்தோடு புரளலாம். ஆனாலும் அதற்காக 100க்கு 90 வீதம் எண்ணிக்கையான மக்கள் பயங்கரமான மிகக்கொடிய துக்கத்திற்கும், தலைதூக்க முடியாத தரித்திரத்திற்கும் ஆளாக வேண்டியிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

மற்றும் இதன் பயனாய் நாகரீகம்—மனிதத்தன்மை என்பதே அரி

ராகி விடுகிறது என்பதையும் நன்றாய் உணர்ந்தேன். பிறகு பதினன்கு வருஷம் கழித்து ருஷிய தேசத்து Oulianoff ஒலியனூவ் என்ற மறு பெயர் கொண்ட லெனின் என்பவர் என்னைப்போலவே அதாவது மார்க்ஸினுடைய நூல்களைப் பயின்ருர்.

1911ம் வருஷத்தில் எங்கள் ஏகாதிபத்திய அரசாங்கங்கள் எங்களை ஒரு பெரிய யுத்தத்தில் இழுத்து விட்டன. ஆனல் நீங்களோ வெகு ஜாக்கிரதையாகத் தப்பித்துக்கொள்ளப்பார்த்தீர்கள். என்ன செய்தும் நீங்களும் யுத்தத்தில் கலந்து தீரவேண்டிய நிர்ப்பந்தம் வந்து சேர்ந்து விட்டது.

ஆகவே யுத்தத்தில் கலந்தீர்கள் அதற்காக நன்றி செலுத்துகிறேன். கடைசியாக அந்த யுத்தமானது மேற் குறிப்பிட்ட மூன்று ஏகாதிபத்தியங்களும் எந்த உள் எண்ணத்தைக் கொண்டு உலக மக்களை யுத்தத்தில் இழுத்து விட்டனவோ அதற்கு நேர்மாரான பயனையே அடைய நேர்ந்தது. அதாவது உலகத்தைக் கொள்ளை கொள்ள நினைத்துத் தொடங்கிய யுத்தமானது அம் மூன்று ஏகாதிபத்தியங்களையும் யுத்தம்கொள்ளை கொள்ள வேண்டியதாய் விட்டது.

முடிஅரசாய் வெகு காலம் விளங்கி வந்த ஐரோப்பா தேசம் இன்று, குடி அரசு மயமாய் விளங்க நேரிட்டது.

ஐரோப்பிய ஐக்கிய நாடுகளைவிட பெரிதாய் இருந்த ஒரே ஒரு முடியரசை-தனிப்பெரும் வல்லரசை (ரஷியாவை) பொது உடமைக் கொள்கையை ஏற்ற குடி அரசு கொண்ட ஐக்கிய நாடாக (Federation of communist republic ஆய்) செய்து விட்டது இது நீங்கள் ஒரு நாளும் எதிர்பாராத காரியம் அல்லவா?

இன்று அங்கு, எங்கு பார்த்தாலும்

கார்ல் மார்க்ஸ் வாழ்க !

உலக தொழிலாளிகளே ஒன்று சேருங்கள் !!

உலக ஏழை மக்களே ஒன்று சேருங்கள் !!!

ஏகாதிபத்தியங்களைக் கவிழ்த்துங்கள் !!!!

என்ற ஆனந்தக் கூச்சலே வானமளாவக் கிளம்பவா உங்கள் மக்களை யுத்த பீடத்திற்கு அனுப்பி பலி கொடுத்தீர்கள்?

எப்படியோ மகாயுத்தத்தின் பயனுய் உங்கள் வாலிப மக்கள் சிந்திய இரத்தத்திலிருந்தும், உலக சமாதானத்திற்கென்று நீங்கள் செலவழித்த பணத்திலிருந்தும், பிறந்த குழந்தை, இந்த அபேத வாத சமதர்ம பஞ்சாயத்து குடியரசேயாகும். (U. S. S. R.) இந்த விபரீதத்தை நீங்கள் எதிர் பார்க்க வில்லையானுலும், இதற்குத் தகுந்த சன்மானம் இது தான் என்று கடவுள் தீர்மானித்து விட்டார். அதை அடைந்தும் ஆய்விட்டது. ஆகவே அதை நேர்மையான—நன்மையான முறையில் பயன்படுத்திக் கொள்வது தான் இனி புத்திசாலித்தனமாகும்.

வல்லரசுகளுக்கும், மகா யுத்தத்திற்கும் பிறந்த குழந்தையாகியரஷிய அபேத வாத தேசத்தின் வியாபாரம் பெருகி ஓங்கவும், நீங்களும் (அமரிக்காவும்) இங்கிலாந்தும், பிரான்சு தேசமும் பின்னைப் பேருக்கு ஏற்பட்ட (யுத்தக் கடன்) கடனை அடைக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கையில் நான் கூறுவது செவிடன் காதில்சங்கூதுவது போல் தான் முடியும் என்பது எனக்குத் தெரியும்.

ஆனல் நான் இப்போது மாத்திரம் இதைச் சொல்லி உங்களைப் பரிகாசம் செய்ய வரவில்லை. அந்தக் காலத்திலேயே அதாவது மகாயுத்த காலத்திலேயே 1914ம் வருஷத்திலேயே சொன்னது உங்களில் பலருக்கு ஞாபகமிருக்கலாம். என்ன சொன்னேன்?

“இருதரப்பு சேனைகளுக்கும் சிறிதாவது பகுத்தறிவு இருக்குமானல், தங்கள் மேல் அதிகாரிகள் கட்டளை இடுகிருர்கள் என்பதற்காக ஒருவரை ஒருவர் சுட்டு வீழ்த்திக் கோள்ளுவதற்கு பதிலாக, அவரவர்கள் வீடுகளுக்குச் சென்று தங்கள் தங்கள் காரியங்களை கவனிப்பார்களாக.”

என்று சொன்னேன் அந்த சமயத்தில் உங்களில் பலர் என் மீது எறிந்து விழுந்தார்கள்.

“தேசபக்திக்கும் பகுத்தறிவுக்கும் என்ன சம்பந்தம்?”

என்றுபலர் கேட்டார்கள் அதாவது “புகழுக்காகவும்,தேச பக்திக்காகவும் செய்யப்படும் யுத்தத்தை பகுத்தறிவுக் கண் கொண்டு பார்ப்பது ஒழுங்காகாது” என்று கடிந்தார்கள்.

பிரிட்டிஷ் சிப்பாய்கள் பகுத்தறிவில்லாமல் மக்களைச் சுட்டுக் கொன்று கொண்டே இருந்தார்கள். பிரஞ்சு சிப்பாயிகள் புத்தி இல்லாமல் தங்களின் வீரத்தை கொளுந்து விட்டெரியக் காட்டிக் கொண்டே இருந்தார்கள். ஜர்மனி சிப்பாய்களும் ஆஸ்டிரியா சிப்பாய்களும் மேற்கண்டவர்களைப் போலவே முட்டாள் தனமாய் நடந்து கொண்டார்கள். இத்தாலிய படையும் இதில் சேர்ந்து கொண்டது. அமரிகசிப்பாய்களோ உடனேகூட்டத்தில் கலந்துகொள்ள ஆத்திரப் பட்டார்கள். துடித்துக் கொண்டிருந்தார்கள். இவர்களில் அமெரிக்க சோல்ஜர்களே அடி முட்டாள்களாய் இருந்தார்கள்

ஆனல் 1917ம் வருஷத்தில் ஒரு அற்புத நிகழ்ச்சி ஏற்பட்டது. அது என்ன வென்ருல் ரஷிய சேனை வீரர்கள் மாத்திரமே எனது வார்த்தைகளை உற்றுக் கேட்டார்கள்-மதித்தார்கள். உடனே “படமுடியாது இனித் துயரம் பட்ட தெல்லாம் போதும் போதும்” எனக் கூவிக் கொண்டு போர்க்களத்தைவிட்டு நேரே தங்கள் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

உடனேதொழிலாளிகளும்சிப்பாய்களுமாய்க்கூடி ஒன்று சேர்ந்து ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதற்கு பஞ்சாயத்து ஆக்ஷி என்று பெயரிட்டார்கள், “எல்லா அதிகாரங்களும் அதன் ஆட்சிக்கு வர வேண்டும்” என்று விளம்பரப் படுத்தினுர்கள். இதன்பயனுய்கொடுங்கோலரசு செய்து வந்த ருஷிய சக்கர வர்த்தியின் (சார்) பயங்கர ஆக்ஷியானது மணல் வீடு சரிவது போல சர சர வென சரிந்து, சிதைந்து ஒழிந்தது.

இங்கிலையில், தக்க தலைவர்களும், தக்கபடி திருத்தி அமைக்கப்பட்ட ஒரு நிர்வாகத்திட்டமும் இல்லாமல் மேலால் ஒன்றும் செய்ய முடியாமல் அவர்கள் தயங்கி கொண்டிருந்தார்கள் இந்தநிலையானது எனது கொள்கைக பற்றியேபின்னவரும்கார்ல்மார்க்சினுடைய உபதேச புத்தகங்களைப் படித்துக் கரை கண்டவருமான லெனினுக்கும் அவரது நண்பர்களுக்கும் அருமையான ஒரு சந்தர்ப்பம் போல் ஆயிற்று. அவர்கள் வெகு தைரியமாய் அக்கூட்டத்தில் (சோவியத் கூட்டத்தில்) குதித்து அதன் தலைமை ஸ்தானத்தையும் ஏற்ருர்கள்.

141 வருஷங்களுக்கு முன்னல் வாஷிங்டன் Washington, ஜப்பர்சன் Jefferson, ஹாமில்டன் Hamilton, பிரான்க்லின், Franklin, டாம்பெயின் Tompain, ஆகியவர்கள் எவ்வாறு அமெரிக்காவில் ஐக்கிய நாடுகளை நிலை நிறுத்தினுர்களோ அது போல் இவர்கள் (அதாவது லெனினும் அவரது நண்பர்களும்) ரஷியாவை சமதர்மப் பஞ்சாயத்து குடி அரசு ஐக்கிய நாடாக ஆக்கினுர்கள்.

அமெரிக்காவுக்கும்-ரஷியாவுக்கும் இம்மாதிரியான ஒப்புவமை ஏற்படுத்துவதில் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருக்குமானல் நீங்கள் தயவு செய்து உங்களுடைய ஓய்வு நேரங்களில் அமெரிக்க பழைய தீவிரப் பத்திரிகைப் பிரதிகளைப் புரட்டிப் பாருங்கள்.

18வது நூற்ருண்டின் பிற்பகுதியில் அமரிக்கரும் பிரிட்டிஷாரும் வெளியிட்ட அரசியல் துண்டுப் பிரசுரங்களையும் பத்திரிகைகளையும் தேடிப்பிடித்து எடுத்து அவற்றில் உள்ள தேதிகளையும், தேசப்பெயர்களையும், தலைவர்களின் பெயர்களையும் அழித்து எடுத்து, விட்டு அதை ஒரு பரிசு போட்டியாகச் செய்து உங்கள் நண்பர்களிடம் கொடுத்து நீங்கள் அழித்து எடுத்து விட்ட அந்த காலிஇடத்தை எழுதிபூர்த்திசெய்யும் படிசொல்லிப்பாருங்கள். அவர்கள்நீங்கள்அழித்து விட்டதேதி ஊர் பெயர்கள் ஆகிய இடங்களில், அமெரிக்காவுக்குப் பதிலாக ரஷியா என்றும், 18ம் நூற்ருண்டின் பிற்பகுதி என்பதற்கு பதிலாக 20வது நூற்ருண்டு முற்பகுதி என்றும், வாஷிங்டனுக்கு பதிலாக ட்ராஸ்கியின் பெயரையும் ஜாப்பரிசனுக்கு பதிலாக லெனின் பெயரையும், பிரான்க்லின் பெயருக்கு பதிலாக விட்விஞப்பையும் பெய்னுருக்கு பதிலாக லூனுசார்ஸ்க்கி பெயரையும் ஹாமில்டனுக்கு பதிலாக ஸ்டாலின் பெயரையுமே தான் எழுதி அந்த காலி இடங்களை பூர்த்தி செய்து கொடுத்து.பரிசு பெறுவார்கள்.

இந்த உண்மையை அப்போட்டிப் பரிசுக்கு வந்தவர்களிடம் சொல்லுவீர்களானுல் அவர்கள் வாய் திறக்கவேமாட்டார்கள், ஆச்சரியப்படுவார்கள். ஆனல் நீங்கள் அவர்களுக்கு ஒரு சிறந்த நற்போதனை செய்தவர்களாவீர்கள். இன்று லண்டன் நகரில் வாஷிங்டனுடைய உருவச்சிலை நாட்டப்பட்டிருக்கிறது. ஆனல்நாளைக்கோ மனிதர்களின் துர்போதனைகளையும், எண்ணங்களையுமெல்லாம் எதிர்த்து வந்த லெனினுடைய உருவச்சிலையானது நியூ யார்க் பட்டணத்தில் நாட்டப்படும். இந்த மத்தியில் நீங்கள் மேற்கண்ட பழைய பத்திரிக்கைகளைப்பற்றி நடத்திய போட்டிப் பந்தயத்தை முடித்துவிட வேண்டும்.

அன்றியும் “நாஸ்திகர்களும்குடிகாரர்களும், துன்மார்க்கர்களும், கள்வர்களும், கயவர்களுமான பஞ்சமா பாதகர்கள் என்பவர்கள் சோந்த ஒரு கூட்டத்தாரால் தூண்டப்பட்டு சமூக நல்வாழ்க்கை சம்மந்தமான சகல கட்டுப்பாடுகளையும் அறுத்து அராஜகத்திற்கும் அகௌரவத்திற்கும் ஆளாய்விட்டதாக தூற்றப்பட்ட தேசம் எது?” என்ருல் 18-வது நூற்ருண்டில் அமரிக்காவும் 20வது நூற்ருண்டில் ரஷியாவும் என்றுதான் அக்கொள்கையின் விரோதிகள் சொல்லுவார்கள். ஆனல் அவர்களிடம் இதன் உண்மை இன்னது என்பதை எடுத்துச்சொல்லி விட்டால் பிறகு உங்கள் ஜோலிக்கு வரமாட்டார்கள்.

இன்று லண்டன் பட்டணத்தில் வாஷிங்டனின் உருவச்சிலைஒன்று விளங்குகின்றது. ஆனல் நாளை அமரிக்காவில் லெனின் உருவச்சிலை ஒன்று விளங்கப்போவது உறுதி! உறுதி!!

இறக, நான் ரஷியாவுக்குச் சென்று வந்ததின் பயனுய் அங்குள்ள காட்சி என்ன என்றும், அதுபற்றி நான் கொண்ட கருத்து என்ன என்றும் அரிய ஆசைப்படுவீர்கள். ஏனெனில் இப்படி ஆசைப்படுவது அமரிக்கரின் சுபாவம்.

ஆகவே நான் ரஷியாவில் முதல் முதல் கண்ட காட்சி என்னவென்ருல் ரஷியாவில் எங்குபார்த்தாலும் அமெரிக்கர்கள் தாராளமாய் காணப்பட்டார்கள்.

இரண்டாவதாகக்கண்ட காட்சி என்னவென்ருல், ரஷியாவின் அறிவாளிகள் ஒவ்வொருவரும் அநேகமாய் அமரிக்காவைப் போய்ப்பார்த்துவந்திருப்பதும் அங்கு இருந்தகால

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

ஆத்திக நாத்திகவாதம்.

எது மனித அனுபவத்திற்கு பொருந்தியுளது?

இரண்டாம் பாகம்.

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

இந்தப் பிரச்சினையைப் பற்றிய (Problem) முதல் பாகத்தில், நமது உலகமும், மற்ற சராசரப் பொருள்களும், கடவுளால் சிருஷ்டிக்கப் பட்ட தென்று (Creation) சமயவாதிகள் சொல்லும் வாதம், அனுபவத்திற்கு மாறாகவுள தென்றும், அதாவது, பிரபஞ்சம் சிருஷ்டி செய்யப் பட்டதென்று அனுமானிக்கவாவது, யாதாமொரு ஆதாரமும் கிடையா தென்றும் ஆனால் பரிணாமம் (Evolution), அதாவது, வொன்றிலிருந்து வொன்று மாறி வரும் காட்சி, யாவருடைய தின அனுபவத்திற்கு பொருந்தியுள தென்றும் சுருங்கக் காட்டி வந்தோம். இந்த பரிணாம சித்தாந்தம் (Theory of evolution), பழமையானதோர் சித்தாந்தமாகும். "சத்தமாம் சோதி தன்னில், சொல்லிய விண்ணும் விண்ணில்......" என்று கைவல்ய நவநீதத்திலும், பாடியுள்ளார். உபநிஷத்துகளும், (Upanisheds) ஒரு விதமான பரிணாம சித்தாந்தம், கூறப்பட்டுள்ளது. கிரீஸ் (Greece) தேசத்து பூர்வகால தத்துவ ஞானிகளில் சிலர் (Grecian philosophers), பரிணாமத்தை சிந்தித்துள்ளார். தற்காலத்தில் (Modern period) காண்ட் (Kant) என்ற ஜர்மன் தத்துவஞானி. பரிணாம சித்தாந்தத்தை, யோசனை செய்துள்ளார். ஆதலின் பரிணாம சித்தாந்தம், பல தத்துவஞானிகளால், சிந்தித்து வந்திருக்கின்றது.

ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) என்ற பிரபல தத்துவஞானி, மெஞ்ஞான வழியாக பிரபஞ்சமும், அதில்வுள்ள சீவ, அசீவங்களும், (Life and non life), பரிணாமத்தால் வளர்கின்றன வென்று, பல வித அனுபவத்தைக் கொண்டு எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆனால், 1859ல், சீவ பரிணாமம், அதாவது உயிர்கள்பரிணமித்த விதம் (Origin of species), டார்வின் (Darwin) என்ற விஞ்ஞானியால், விஞ்ஞான முறைப்படி ஸ்தாபிக்கப்பட்டது. அது முதல் பிரபஞ்சமும், சேதன அசேதனங்களும், பரிணமித்து வந்த விதம், அனுபவத்தைக் கொண்டு விளக்கி வைக்கப் பட்டு வருகிறது.

லாபலெஸ் (Laplace) என்ற கணித ஞானி, நமது உலகமும், சூர்ய சந்திர நவக்கிரகங்களும், வந்த விதத்தை மெஞ்ஞான வழியாகக் காட்டியுள்ளார். இவர் செய்துள்ள யுக்தியைத்தான், பிரபல சித்தாந்தமாகிய வெண் மாசிசித்தாந்தமென (Nebular hypothesis) வழங்குவார்கள். இந்த சித்தாந்தத்தைபற்றிய வோர் ருசிகரமானகதை உண்டு.

லாப்லெஸ் (Laplace) என்ற மேற் கூறிய பிரஞ்சு மெஞ்ஞானி, தனது அரிய நூலாகிய (Celestial mechanics,) வான அமைப்பு, என்னும் நூலை இயற்றிய பின்னர், அதைப்படித்த பிரஞ்ச் சக்கரவர்த்தியாகிய நெப்போலியன் (Napolean), அவரை அழைத்து, உமது "பிரபஞ்சஅமைப்பில்" கடவுளுக்கு இடமில்லையாவென்று வினவிய காலத்து, லாப்லெஸ் பெரியார், தனதுபிரபஞ்சக் கட்டடத்தில், கடவுள் இருப்புக்கு அவசியமில்லை, என்றனராம்! அதாவது பிரபஞ்சம் கடவுளால் சிருஷ்டிக்கப்படவில்லை. இயற்கையாகவே, பூதபௌதிக சக்தியால், வொரு நிலைமையிலிருந்து மற்றோர் நிலையைக்கு மாறி வருகின்றகருத்தை லாப்லெஸ் குறிப்பித்தார். இந்த வெண் மாசி சிததாந்தத்தை [Sir james jeans) என்ற வான மெஞ்ஞானி தனது (Tidal theory) என்ற வெள்ளப் பெருக்கு சித்தாந்தத்தால், சில மாறுதலுடன் ருசுக்களை (Proofs) கண்டு பிடித்துள்ளார் இந்த சித்தாந்தங்களை விப்ரமாகஅறிந்துகொள்ள விருப்பமுடையவர்கள். "பிரபஞ்ச வுற்பவம்" என்ற, தமிழில் இனி பிரசுரிக்கப்படும் நூலை வாசிக்கலாம்.

இவ்விதமாக மெஞ்ஞானம், (Science), பிரபஞ்சமும், சராசரங்களும், வந்த வகையை (method), பல அனுபவங்களைக் கொண்டு, யூகித்துவர, "கடவுள் சிருஷ்டி" (Gods creation) என்ற புராதன கற்பிதத்திற்குஎன்ன அத்தாட்சியை, சமய வாதிகள் கொடுக்கக் கூடும்? சமயங்கள் உண்டான கால முதல், "சிருஷ்டி, சிருஷ்டி" என்ற குருட்டுப்பாடத்தை மதஸ்தர்கள் பாடிவந்தனரே யொழிய உண்மையை தெரிந்து கொள்ள எந்த சிரத்தையும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், நாஸ்திகனே பல நூற்றாண்டுகளாக, தன்னுடையஅனுபவத்தில் வரும் காட்சிகளை (Phenamena), சேர்த்து, சேர்த்து வைத்து, அவைகள் மூலமாக வரும் அனுமானங்களைக் கொண்டு பிரபஞ்ச வரலாற்றை நிரூபித்து வருகின்றான். உண்மை இன்னதென அறிவான் வேண்டி, இத்தியாதி பிரயாசை எடுத்து வரும் நாஸ்திகனை, கடவுள் இல்லை என்ற கயவன் என்றும், மதத்துவேஷி என்றும் ஏளனம் செய்வதா யோக்கிய பொறுப்பு என்று கேட்கின்றோம்?

(Charles Braudlaw) சார்லஸ் பிராட்லா என்ற பிரபல நாஸ்திக வாதியைப் பார்த்து, ஒரு பெண்மணி, "The fool hath said in his heart, there is no God" என்று இகழ்ந்தாளாம். உடனே பிராட்லா பெரியோன், அந்தம்மையை நோக்கி, "He doth calleth his brother, a fool, is in danger of hell fire" தன்னுடைய சகோதரனை மூடனென்று அழைப்போன், நரக அபாயத்தில் விழக்கடவன், என்றாராம்! இவ்விரண்டு மேற்கோள்களும், கிறிஸ்துவர்களின் வேத புத்தகமாகிய விவிலிய நூலிலிருந்து எடுக்கப் பட்டவை. இவ்விதமாக வொன்றுக் கொன்று மாறாகப் பிதற்றும் நூல்களை; தேவ வாக்கெனக் கருதுவோர், கயவரா? அல்லது அனுபவத்தை ஒட்டி பேசும் நாஸ்திகர் கயவரா, என்று கேட்கின்றோம்?

இரண்டாவதாகக் கூறும் வாதமாகிய, உண்மை, அழகு, கோரிக்கை முதலிய எண்ணங்கள் மனித வுள்ளத்தில், கடவுள் ஒருவரால் அமைக்கப் பெற்றுள்ள தென்ற வாதத்தினையும் பரிசீலனை செய்தோம். உண்மை என்றால் என்ன? கண்ணால் பார்த்ததைச் சொல்லுதல் உண்மை. காதால் கேட்டதைச் சொல்லுதல் உண்மை. அது போலவே நமது புலன்களாலும்மற்ற அவயவங்களாலும் அனுபவித்த விஷயங்களைக் கூறல் உண்மை எனப்படும். அந்தப் புலன்களும் அவயவங்களும் கடவுளால்சிருஷ்டி செய்ததை யாரும் பார்த்தறியார். அவைகள் மூலமாக எழும் விஷய ஞானங்களாகிய, உண்மை, அழகு, கோரிக்கை முதலியவைகளை, கடவுள் சிருஷ்டித்தார் என்று யார் பார்த்தார்களென்று கேட்கின்றோம்? அந்த அவயவங்கள், இயற்கையாகவே உண்டாயினவென்றால், அவைகள் மூலமாக எழும் உணர்ச்சி ஏன் இயற்கையாகவே எழுகின்றனவென எண்ணலாகாது? கண்ணாடிக்கு பிரதிபலிக்கும் (Reflection) குணத்தை யார்சிருஷ்டித்தார்கள்? தண்ணீரில் நமது முகம் பிரதிபலிக்கின்றதே அந்த குணத்தை தண்ணீருக்கு யார் கொடுத்தார்கள்? இத்தியாதி குணங்கள் அந்தந்த வஸ்துக்களின் இயற்கை அமைப்பென்றால் பார்த்ததை சொல்லும் விஷயத்திற்கு கர்த்தா ஒருவர் ஏன்வேண்டும்?

அழகை எடுத்துக்கொள்ளுவோம். அழகான வஸ்துக்களை கடவுள் படைத்தார் என்றால் அழகில்லாத வஸ்துக்களை யார்படைத்தது? பேயா? பிசாசா? அழகுக்கு கர்த்தா வேண்டுமானால் அவலட்சணத்திற்கும் கர்த்தாவேண்டுமன்றோ? இன்னொரு ஞாயமுண்டு. மனிதர் உள்ளத்தில் அழகை மதிக்கவேண்டிய குணத்தை கடவுள் படைத்தார் என்றால், ஒரு கூட்டத்தார் மதிக்கும் அழகை மற்றொரு கூட்டத்தார் அவலட்சணமென்பானேன்? ஐரோப்பியர்கள் கருதும்அழகு, இந்தியருக்கு அவலட்சணமாகக் கருதப்படுகின்றது. இந்த வித்தியாச உணர்ச்சி கடவுளால் ஏற்பட்டது? எதார்த்தம் என்னவெனில் அழகு என்பதும் அவலட்சணமென்பதும், பழக்கவழக்கத்தால் உண்டாகும் உணர்ச்சிகள். நமது உணர்ச்சியை நீக்கலாக, அழகென்பதும்,அவலட்சணமென்பதும், யாதுமில்லை. அவ்வித உணர்ச்சிகள் பழக்கத்தால் உண்டாகின்றன. இருப்பது வஸ்துக்கள், ஆனால் அவைகளை அழகென்பதும், அவலட்சணமென்பதும், பழக்கமே. ராமனுக்கு அவலட்சணமாகத்தோன்றிய சூர்ப்பனகை ராவணனுக்குஅழகாகத்தோன்றினாள் இந்த இவ்விரண்டு உணர்ச்சியும் பழக்கத்தினால் தோன்றுகின்றனவென அறிக. தேளுக்கு அழகாகத் தோன்றும் தேள், மனிதனுக்கு அகோரமாகத்தோன்றுகின்றது; இதுவும் பழக்கமே.

அன்பை எடுத்துக்கொள்ளுவோம். அன்பை யாரும் வெளியில் பார்த்திலர். சில நடத்தைகளைக்கண்டு (Behaviour) அவைகளை அன்புள்ள நடத்தை என்றும், துவேஷ நடத்தை என்றும் கூறுகின்றோம். வஸ்துவன்னியில் அழகோ, அகோரமோ, இல்லாமை போல் நடத்தையன்னியில் அன்போ, துவேஷமோ, இல்லை என அறிக. பிறனுக்கோ, அல்லது தனக்கோ, நன்மைதரும் நடத்தை அன்பெனவும், அதற்கு விரோதமான நடத்தை துவேஷமெனவும் கூறுகிறோம். தாயின் அன்பு என்றபோது,தாயின் நடத்தையைக்குறிக்கும்.பகைவனின் துவேஷமென்றபோது பகைவனின் நடத்தையை குறிக்கும். அன்புக்கும், துவேஷத்திற்கும் வேண்டியது நடத்தையே. இந்த நடத்தை தேகத்தைப்பொருத்தது. எப்பொழுது தேகம் வந்ததோ, அப்போதே நடத்தையும் வந்தது. தேகத்துடன் கலந்திருப்பது நடத்தை.

நடக்கும் நடத்தையாய் இருந்தா

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

ஏழை அழுதகண்ணீர் கூரியவாள் ஒக்கும்.

(C. S;—B. A.)

பூபாரம் என்றால் என்ன? நிலத்தை வைத்துக் கொண்டு வரிகொடுக்க இயலாது கடன் அடைக்க முடியாது திகைப்பதே ஆகும்.

10வருஷத்திற்குமுன் நெல் கலம் 4ரூபாய் அல்லவா? ஆனால் அப்பொழுது மழைஇல்லை. ஆற்றில் ஓட்டமில்லை. பதினெட்டாம் பெருக்கு காணக்கிடைக்கவில்லை. கதிர் எல்லாம் புதராய் இருந்தது. குதிர் எல்லாம் குட்டிச்சுவராய் விளங்கின.

இப்பொழு மாதம் மும்மாரி பொழிகிறது. ஆறெல்லாம் புது மதுவழிந் தோடுகிறது. சேர் எல்லாம் வானமளாவ ஓங்குகிறது. ஆனால் கல நெல் முக்கால் ரூபாய்க்கு நாறுகிறது. பணப் பெட்டிகள் காலியாய் கிடக்கின்றன.

என் செய்வார் பாவம்! அந்தோ தஞ்சை நாடே! சோறுடைத்து என்று புகழ் பெற்ற என் தாயகமே! நெற்களஞ்சியம் என்றுபோற்றப்படும் வள நாடே! உனது பொன்விளையும் நிலமெல்லாம் பங்கிட்டு அநுபவிக்கும் மிராசு தார்களின் நிலை தான் என்னே அன்று விளைவில்லை, விளை வில்லை என்று ஓலமிட்டனர். இன்று பணமில்லை,பணமில்லை என்று பதறுகின்றனர். இவை இரண்டும் ஒருங்கே கிடைக்கும் என்று எண்ணும் அறிவு தான் என்ன?

ஆனால் ஏழைக் குடியான வர்கள் நிலை என்ன? நெல் விலை கூடி விற்ற காலத்தில் அரைமுழ த்துணிகூட உடுத்தினார்களோ? இல்லையே! இப்பொழுது அகவிலை படுத்துக்கிடக்கும் காலத்தில் வயிறார உண்கிறார்களோ? இல்லையே! அன்று கண்ட மேனிக்கு அழிவிலாது விளங்குகிறார்கள்.

“இந்த நாய்களுக்கு 8அணா அன்று 10அணா தொலைத்து துரத்தி விடுவதே நன்று” என்றார்கள் அன்று! “இக்கழுதை களுக்கு 1மரக்காலுக்கு இருமரக்காலாக கொட்டி அழுதுவிடவேதேசிறந்தது” என்கிறார்கள்இன்று. மிராசுதார்கள் குடியானவர்களிடம்காட்டும் மனப்பான்மை தான் என்னே! தங்கள் நலத்திற்கு ஏற்றவாறு கூலி முறையை இயற்றுவதை என்னென்பது?

பரம்பரைகுடியானவர்களே! நீங்களே சாதி சமய பேதமற்று நாட்டிற்கு தொண்டு செய்யும் தோழர்கள். வெய்யிலால் உலர்ந்து மழையால் நனைந்து வாடும் மக்கள் நீங்களே! நிலத்தை திருத்துவோர் நீங்கள்! உரம் கொடுப்போர் நீங்கள்! உழுவோர் நீங்கள்! விதைப்போர் நீங்கள்! நடுவோர் யாவர்? அறுப்போர் யாவர்? யாவும் நீங்களே. ஆற்று நீர் பாய்கிறது. வானத்து நீர் பொழிகிறது. நெல் விளைகிறது. தை பிறக்கிறது. நீங்கள் பட்டபாடெல்லாம் பாழாகிறது. வள்ளல்கள் வயல் கரைகளில் தோன்றுகிறார்கள். உங்களுக்கு ‘வாரத்தை’ அளந்து விடுகிறார்கள். ஆ! களவடி, போரடி என்று உங்கள் வயிற்றில் அடித்து விடுகிறார்கள். உங்கள் கண்கள் கலங்குகின்றன. பெண்டு பிள்ளைகள் கதறுகின்றன! பொங்கலோ பொங்கல் என்று இங்கும் அங்கும் முழங்குகின்றது. ஆனால் உங்கள் பள்ளித்தெருவிலோ, பறைச்சேரியிலோ, கூழாண்டே! கூழாண்டே! என்ற ஓலமே ஓங்குகிறது.

இதைக்கேட்டு சிலர் திடுக்கிடக்கூடும். முன்னோர்கள்சம்பாதித்ததைபின்னோர்கள் ஆளஉரிமை இல்லையோ? பரம்பரை பாத்தியதையை மறுப்பது நீதியோ? தனிஉரிமையைக் கெடுப்பது தருமமோ? என்று பலர் கேட்கக்கூடும்.

இந்த மிராசுதார்களின் முன்னோர்கள் ஆயிரம் வேலி நிலத்தை சுருட்டி மடக்கி கைலாயத்திலிருந்து கொண்டு வந்தனரோ? அன்றி ஆயிரம் கைபடைத்து, ஐந்நூறு ஏர் ஓட்டி (Product of labour) தேடினரோ? மற்றும் பாடுபட்டுத்தேடி உண்டது போக நின்றது (Surplus) கொண்டு இவ்வளவையும் கைப்பற்றினரோ? இல்லையே! வாழையடி வாழையாய் வந்த வீணர்திருக்கூட்டத்திற்கு இனி வாழ்வேது?

பரம்பரை பாத்யம், சாஸ்திர சம்பிரதாயம், சட்ட திட்டம் எவ்வகுப்பின் நன்மைக்காக ஏற்பட்டுளது என்பதை உணர்க.

மிராசுதார்களே! புதுயுகம் தோன்றி உள்ளது என்பதை அறிக! திண்ணைதூங்கி களுக்கும், வீண்டடியர்களுக்கும் இனி இங்கு இடமில்லை என்பதையும் அறிக! மோழைக்கைப்பிடித்து ஏரை ஓட்டி நிலத்தை உழுவீர்! அதுவே நீதிஎன்றுஉணருங்கள்! “முடியுமோ!” என்று ஏங்கவேண்டாம். அடைத்த வயிறுகுலைய பந்து விளையாடுவதை விட்டு உண்மையாய் உழைக்கப்பயிற்சி பெறுங்கள். “தெய்வத்திற்கு அடுக்குமோ” என்று முறையிடவேண்டாம். தெய்வம் என்னும் மாயை ஞானம் என்னும் பரிதி முன்பு ஓடி ஒளிந்து மறைந்து அழிந்து விட்டதை அறியுங்கள்.

இந்த ஏழைக்குடியானவர்களை நினைக்குங்கால், மற்றொரு அனுதைக் கூட்டத்தின் எண்ணம் எழுகிறது. அவர்கள் யாவர்? அரசாங்க, சிறு ஊழியர்கள் (Menials) போலீஸ் சேவகர்கள், ஆபீஸ்பியூன்கள்; வெட்டி, தலையாரிகள் முதலியோர். இவர்கள் பெறும்கூலிஎன்ன? மாதமொன்றிற்கு ரூ 8 முதல் 10 வரையில்தானே. இவ்வளவு சொற்பக் கூலியைக் கொண்டு இவர்கள் ஒன்றித் திருக்கச் செய்தல் கூடுமோ? இவர்கள் வயிறு என்றாவது நிறைந்த துண்டா? இவர்கள் மனைவி மக்கள் நல்லாடை உடுத்தி யதுண்டா? இதையாராவது நினைத்த துண்டா?

இவர்கள் படும் பாட்டை என் சொல்வது? பகல் முழுதும் கச்சேரிகளில் உழைக்க வேண்டும்! இரவு முழுதும் உத்தியோகஸ்தர்கள் வீட்டில் மாரடிக்க வேண்டும்! கால் கடுத்து உட்காரும்வேளையில் கடைக்கு ஓட வேண்டும்! அலுத்து களைத்து துணியை விரித்துப் படுக்கும் சமயம் எஜமான் உத்திரவுப் படி விறகு உடைக்க வேண்டும்! அந்தோ! என் செய்வார்! இவ் வேழைகள்! வாயிலாப் பூச்சிகள்! இவர்கள் அழுது அழுது அழவும் திறம் கெட்டுப் போயினர்.

உத்தியோகஸ்தர்களே! உங்கட்கு எத்தனை சங்கங்கள்! கலக்டர்கள் மகாநாடு; கெஜட்டட் ஆபீஸர்கள் சங்கம், நான்—கெஜட்டட் அபீஸர்கள் சங்கம், எத்தனை கூட்டம்! எத்தனை தூது! எத்தனை பத்திரிகைகள் உங்கள் குறைகளைத்தானே பத்தி பத்தியாய் வெளியிடுகின்றன. நீங்கள் “ஐய! ஸ்டோக்ஸ் துரையே! அறுபது லட்சம் மிச்சப் பட்டுளதே! வருமானம் பெருகிய வுடன் குறைத்த சம்பளத்தை கூட்டுவேன் என்றீரே! “அவசர வெட்டினால்” (Emergency cut) நாங்கள் ஏழையானோம். எங்கள் குறையை முதலில் தீர்ப்பீர்” என்று முறையிடுகின்றீர்கள். பத்திரிகைகளும் ஸ்டோக்ஸ் துரை அளித்த வாக்குறுதியை எடுத்துக்காட்டுகின்றன. மிஸ்டர். ஸ்டோக்ஸ் துரை வாக்களித்த தன்மையும், அதை தன்னல வாதிகள் எடுத்துக்காட்டும் பான்மையும் கூடிய அழகே அழகு! இப்படி தலையில் அடித்தலும் சத்தியம் செய்தலும் எதற்கு? அப்படியே நடக்கவேண்டும் என்று ஓதலும் எதற்கு? எக்குடியை கெடுப்பதற்கு? யார் வயிற்றில் அடிப்பதற்கு? (“It is a code of honour that impresses me as a conspiracy against the common weblfare and purpose in life” H. G. wells)

இந்த அறுபது லட்சத்தையும் காவிரியில் கொட்டுக என்பார் தமிழர்! கோதாவரியில் கொட்டுக என்பார் ஆந்திரர்! குறைத்த சம்பளத்தை கூட்டுக என்பார் உத்தியோக வர்க்கத்தினர். இவ்விதம் முறையிடும் நிலஉரிமையாளரும், உத்தியோகவர்க்கத்தாரும் ஏழைக்குடியானவர்களையும், சேவகர்களையும் வெட்டியானையும் நினைத்தனர்அல்லர். தாங்கள்சுகபோகங்களை அனுபவிக்க முயற்சிக்கின்றனரே அன்றி ஏழைகள் தங்கட்கு அவசியமான உணவிற்கும் உடைக்கும் ஏங்கி நிற்கின்றனர் என்பதைக்கனவிலும் கருதியவர்கள் அன்று.

மிராசுதாரர்களாவது படியாதவர்கள், உலகம் அறியாதவர்கள், கிணற்றுத்தவளைகள். இந்த உத்தியோகஸ்தர்களோ! படித்தவர்களோ! பட்டதாரிகளோ! ஆயினும், ஏழைகளிடம் காட்டும் மனப்பான்மையில் இவ்விரு கூட்டத்தினரும் ஒரே தரத்தினரே. முன்னவருக்கோ செல்வச் செருக்கும், சாதித் திமிரும். பின்னவருக்கோ கல்விச் செருக்கும் அதிகாரத்திமிரும். “படித்தவர்களும், பணக்காரர்களும் ஏழைகளின் பரம விரோதிகள்.” என்று லெனின் கூறியது முக்காலும் உண்மை தானே. ஆகவே

“ஆடெரி படர்ந்த கோடுயர் அடுப்பில், ஆம்பிபூப்பத் தேம்பசி யுழவா, இல்லி தூர்ந்தன. பொல்லாவறுமுலை சுவைத் தொறும், சுவைத் தொறும், பால் காணமல் குழவி, தாய்முக நோக்க, மனைவி என் முக நோக்க”

என்று பழய காலத்து புலவர் பாடியவாறு ஏழைகள் நிலை இன்றும் உளது.

இப்பொழுது உலகத்தைப் பற்றியுள்ள பொருளாதார துன்பங்கட்கு, மாஜி மந்திரி தோழர் முத்தையா “அபேத வாதத்தைத் தவிர வேறு மருந்துண்டோ” என்று சென்ற ஆண்டு‘ஸ்காலர்’ (The Scholar) என்றசஞ்சிகையில் வினவுகின்றார். பொருளாதார துன்பம் என்பது யாருக்கு? பாலுக்கு சர்க்கரை இல்லை என்று ஏங்கும் வீணர்களுக்கா? அன்றி கூழுக்கு உப்பில்லை என்று துயறுரும் “இவர் போய் அவராய் அவர் போய் இவராய் இதுவே தொடர்பாய்” எவரோ ஒருவருக்கு என்றும் அடிமைப் பட்டு, கொடுமைப் பட்டு கிடக்கும் ஏழைகளுக்கா? ஆய்ந்துணர்ந்து தோழர்களே! ஆவன புரிய முன் வருவீர்களாக. ஹெ அபேத வாதமே! ஏழை (கோழை) உலகு உருந்துயரம் இனி பொறுக்க மாட்டேன், கொடுத்தருளும் நின் ஒழியை கொடுத்தருள் இப்பொழுதே!

“புரட்சி ஓங்குக!
பொதுவுடமை
தோணுக!!”

ஏழை மக்களுக்கு
இனிவேறு கதி
இல்லை.

மதத்தைப்பற்றி லெனின் எழுதியது.

முகவுரை.

—:O:—

[S. R. & E. V. R. மொழிபெயர்ப்பு]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

1913ம் வருஷத்தில் மாக்ஸிம் கார்க்கி என்ற நூலாசிரியருக்கு லெனின் எழுதிய இரண்டு கடிதங்களும் இந்தத்தொகுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறன. அவைகள் மிக முக்கியமானவை என்பதோடு கடவுளைப்பற்றி விவரிக்கப்பட்டிருப்பதுமாகும். அன்றியும் மதச் சார்புடனும் ஆவேச, எழுச்சியுடனும் தோன்றும் ஒரு விதமான சோஷியலிஸ்ட் கட்சியை புதுப்பிப்பதைஇக்கடிதங்கள் கண்டிக்கின்றன. 1905ம் வருஷத்தில் புரட்சி இயக்கம் தோல்வி அடைந்து விட்ட பிறகு "கடவுளைத்தேடும்" கூட்டமொன்று லூனசார்ஸ்கி, கார்க்கி ஆகிய இவர்களைச்சுற்றி இருந்தது. இந்தக்குற்றம் லெனினுடன் நெருங்கி இருக்கும் சிநேகிதர்கள் இடமும், தோழர்கள் இடமும்காணப்பட்டதால் லெனினுடைய கண்டனம் ஆக்கிரமாகப்பாய்ந்தது.

கடைசிக் கட்டுரையாக 1920௵ல் கம்யூனிஸ்ட்களுக்கும் ஒழுக்கத்திற்கும்உள்ள வித்தியாசத்தைப்பற்றி கம்சமால் என்ற கம்யூனிஸ்ட் இளைஞர்களுக்கு லெனின் செய்த அறிய பிரசங்கம் ஒன்றின் சில பாகங்கள் 'இத்தொகுதியின் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே மேற்கண்ட கட்டுரைகள் அடங்கிய தொகுதிகளில் இருந்து லெனினுடைய நான்கு கொள்கள் முக்கியமாக விளங்கும். அவையாவன:—

1. நாஸ்திகமென்பதுமார்க்ஸ் கொள்கைகளில் முக்கியமான பாகமாகையால் தனது முதலாளி— தொழிலாளி என்கின்ற வகுப்பு நிலையை உணர்ந்த ஒரு மார்க்ஸ் கட்சியானது நாஸ்திகப் பிரசாரத்தை செய்தே தீரவேண்டும்.

2. கோவில், மதம் ஆகியவைகளை விட்டு அரசாங்கத்தையும், பள்ளிக்கூடங்களையும் அறவே பிரித்துவிட நாம் முயல வேண்டும்.

3. தொழிலாளர்களுடைய ஆதரவை நாம் சம்பாதிக்கவேண்டுமானல் முக்கியமாக நாம் அவர்களோடு தினசரியும் கலந்து அவர்களது பொருளாதார அரசியல் நன்மைகளுக்கு பாடுபட வேண்டும். ஆகையால் தொழிலாளர் நன்மையை பாதுகாப்பதிலிருந்து கிளம்பி அதோடு நெருங்கிய சம்பந்தத்துடன் நாஸ்திகப் பிரசாரம் வளர்த்து வர வேண்டும்.

4. கஷ்டப்பட்டு உழைக்கும் பொது மக்கள் மதத்திலிருந்து கடைசியாக விடுதலை அடையக் கூடிய காலம் எதுவென்றால் தொழிலாளர் புரட்சிக்கு பிறகு ஏற்படும் பொது உடமைச் சமூகம் ஏற்படும் காலமேயாகும்.

ஆனால் இந்தக் காரணத்தினால் நாம் நாஸ்திகப் பிரசாரம் செய்வதை ஒத்திப்போடக் கூடாது. தொழிலாளர் போராட்டத்தின் பொது அவசியங்களுக்கு உட்பட்டு நாஸ்திகப் பிரசாரம் செய்து வர வேண்டியது மிக அவசரம் என்றே வெளிப்படுகிறது.

மதத்தைப்பற்றி லெனின் கொண்டிருந்த மனப்பான்மையை, 1919-வருஷம் மார்ச்சு மாதம் வெளியிடப்பட்ட ரஷ்ய பொதுவுடமைக் கட்சியின் திட்டத்தில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அதாவது "பொது ராஜீய பிரச்சினைகள்" என்ற தலைப்பில், 13வது பகுதியில் அடியில் கண்டபடி காணப்படுகின்றது. அதாவது:—

"மதத்தைப் பற்றிய விஷயத்தில் சோவியத் ஐக்கிய நாடுகளின் பொது உடமைக் கக்ஷி ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட கோவிலையும் அரசாங்கத்தையும் பிரித்தல், கோவிலையும் பள்ளிக் கூடங்களையும் பிரித்தல் என்னும் கோரிக்கைகளோடு நிற்க முடியாது. இந்த கோரிக்கைகள் எல்லாம் பணக்கார ஜன நாயகத்திட்டங்களிலும் காணப்பட்டாலும் கூட, மதபிரசாரமும். பணக்காரர்கள் நன்மையும் ஒன்றோடொன்று பல வழிகளிலும் சம்பந்தப் பட்டு பிணைத்துக் கொண்டிருப்பதால் இந்த கோரிக்கைகள் எந்த விடத்திலும் ஈடேற்றப்படவில்லை."

"சோவியத் ஐக்கிய நாடுகளின் பொது உடமைக் கட்சியாரின் அபிப்பிராயத்தில் பொது மக்களுடைய சமூக பொருளாதார நடவடிக்கைகள் நிதானமாகவும் உறுதியாகவும்திருத்தி அமைக்கப்பட்டால் ஒழிய மத முரண்பாடுகள் மறையமாட்டா என்று தோன்றுகின்றபடியால் அந்தப்படியே நடக்க வேண்டியவர்களாகிறார்கள். கொள்ளையடிக்கும் கூட்டத்திற்கும் மதப்பிரசாரத்திற்கும் அதன் நிர்மாணங்களிற்கும் ஏற்பட்டிருக்கும் சம்மந்தங்களை அறவே ஒழிக்கவும் தொழிலாள மக்களை மத முரண்பாடுகளில் இருந்து உண்மையில் விடுவிக்க வழிதேடவும் விஞ்ஞானம், கல்வி, மத விரோதம் என்ற விஷயங்களைப்பற்றி கூடிய அளவு விசாலமான பிரசாரம் செய்ய நிர்மாணிப்பதும் ஆகிய இந்த வேலைகளைச் செய்ய இக்கக்ஷி முயலும். அதோடு கூட இந்த முயற்சியில் மதத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களின் மனதுக்கு ஆத்திர மேற்படுத்தாமல் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ளவேண்டும். இது மிகவும் அவசியமான காரியமாகும். ஏனென்றால் அந்தப்படி அவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டுவதால் அவர்களுக்கு ஒருவித ஆவேசம் ஏற்பட்டு அவ்வாவேசமானது மதத்தை உறுதிப்படுத்துவதிலேயே முடியும்."

இதைப் போலவே 1908ம் வருஷம் சர்வதேச பொதுவுடமைக் கக்ஷியார் 6-வது உலக காங்கிரசில் ஏற்படுத்திய திட்டத்தில் அடியில் கண்டவாறு கூறி இருக்கிறார்கள்.

"நமது கல்வி, புரகூஷி வேலைகளில் மக்களை மயக்கும் மதத்தோடு போர்புரிவது ஒரு முக்கிய வேலையாகும்.

இந்தப் போர் இடைவிடாமலும், அமைப்புதிட்டத்தோடும் உறுதியாய் நடத்தப்பட வேண்டும். தொழிலாளருடைய அதிக்கத்தில் கோவிலுக்கு அரசாங்கம் எவ்வித ஆதரவும் அளிக்கக் கூடாது.

பாதிரி கூட்டங்கள் புரட்சிக்கு விரோதமாக செய்து வரும் வேலைகளைக்கண்டிப்புடன் அடக்கவேண்டும்.

ஆனால் அதே சமயத்தில் மதத்திற்கு விரோதமான பிரசாரம் நடத்துவதற்கு சாத்தியமான முயற்சிகள் எல்லாம் செய்யப்படும்.

கோவிலுக்கு ஏற்பட்டிருக்கும் பெருமையும் செல்வாக்கும் ஒழிக்கப்படும். விஞ்ஞான பிரகிருதி வாத நோக்கப்படி கல்வி திட்டங்கள் அமைக்கப்படும்." என்றும்,

மற்றும் இந்த திட்டத்திலேயே "முதலாளி தத்துவத்தில் எழுச்சியடையும்விதிகளும்தொழிலபிவிர்த்தி செய்யும் முதலாளிகளின் காலமும்" என்ற தலைப்பின் கீழ் அடியில் கண்டபடி காணப்படுகின்றது.

"விஞ்ஞான ஆராய்ச்சி ஏராளமாகப் பெருகி பலனளித்து வந்தபோதிலும் பணக்கார வகுப்பார் இந்த ஆராய்ச்சிக்குத் தக்கவாறு ஒரு தத்துவஞானம் ஏற்படுத்திக் கொள்ள வகையின்றி பழைய பாரமார்த்திகம், யோகம், மதமூட நம்பிக்கைகள் ஆகியவைகளையே வளர்த்து வருகிறார்கள்."

மேலும் இந்த திட்டத்தின் முன்னுரையிலும் அடியிற் கண்டவாறு உறுதியாய் கூறப்படுகிறது "மார்க்ஸ், எஞ்சல்ஸ் இவர்களுடைய பிரகிருதி தத்துவத்தை வாதித்தும் பிரசாரம் செய்தும் வருவதோடு உண்மையைநிர்த்தாரணம் செய்வதற்கு அதையே ஒரு புரட்சி மார்க்கமாக கொண்டு அந்த உண்மையை புரட்சி வழியாக மாற்றி அமைத்தும் சர்வதேச பொதுவுடமைக் கட்சியார் பணக்கார தத்துவங்களுக் கெல்லாம் விரோதமாய் வெகு தீவிரமாக போராடுவார்கள்" என்பவைகளாகும்.

இந்த முன்னுரையின் ஆரம்பத்தில் மார்க்ஸ் உடைய கொள்கைகளுக்கு நாஸ்திகம் அவசியம் எனக்கூறினோம். மார்க்ஸ்உடைய கொள்கைகளுக்கு ஒத்துவராத நாஸ்திகம் ஒருபடியும் காண முடியாததும், முன்னுக்குப் பின் முரண்பாடாயும் இருக்க நேரிடும் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுகிறோம்.

பணக்கார வகுப்பார் துவக்கிய சுதந்திர அறிவு இயக்கங்கள் எல்லாம் பின்னடைந்து விட்டதே இதற்கு தக்க சான்றாகும்.

விஞ்ஞானத்தில் இருந்து உதிக்கும்பிரகிருதிவாதம் சரித்திரபூர்வகமான பிரகிருதி வாதமாக அதாவது, மார்க்ஸ்உடையகொள்கையாகமாறாத பொழுதில்லாம அது பாரமார்த்திகமாகவும், மூடநம்பிக்கை கொள்கையாகவுமே மாறுகிறது..

எலெக்ஷன் கூத்து.

(சித்திரபுத்திரன்)

தமிழ் நாட்டில் ஸ்தல ஸ்தாபனங்களில் புதிய சீர்திருத்தத்தின்படி என்று நடைபெறும் எலக்ஷன்கள் (தேர்தல்) சம்பந்தப்பட்ட காரியங்களில் எல்லாம் ஏதாவது குழப்பமும், சண்டையும், கலகமும், அடிதடியும், கொலைகளுமான காரியங்கள் அவ்வளவுமோ அல்லது ஏதாவது ஒன்றோ நடந்த வண்ணமாகவே இருக்கிறது. அது மாத்திரமல்லாமல் தேர்தல் அதிகாரிகள் நடவடிக்கைகளும் மிக மிக மோசமாகவே இருக்கின்றன.

இனிமேல் தேர்தல்கள்—எலக்ஷன்கள் ஏற்பட்டவுடன் அதன் அபேக்ஷகர்களை காவலில் வைத்துவிட்டு எலக்ஷன்கள் நடத்தப்பட்டால் ஒழிய கலகமும், கொலையும் நடக்காமல் இருக்குமா என்கின்ற விஷயம் சந்தேகமாகவே இருந்து வருகின்றது. சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நிலையோ மிகமிக மோசமாயிருக்கின்றது. பெரிய பொறுப்புள்ள அதிகாரிகள் முதல் சாதாரண போலீஸ் ஆபீஸர்கள் என்பவர்கள்வரை மோசமாகவே நடந்துகொள்ளுகின்றார்கள்.

ஒரு சிறு கதை சொல்லுகின்றோம். ஒரே ஒரு ஊரில் ஒரு எலக்ஷன் நடந்தது அதற்கு நின்ற இரண்டு அபேட்சகர்களும் "எலக்ஷன் அதிகாரியிடம் சென்று எலக்ஷன் எப்படி இருந்தாலும் தங்களுக்கே அனுகூலமாய் இருக்க வேண்டுமென்று தனித்தனியே கேட்டுக் கொண்டு ஆளுக்கு 100 ரூ. வீதம் இரண்டுபேரும் "இரகசியமாய்" கொடுத்து விட்டுவந்து விட்டார்கள், அதற்கு ஏற்றாப் போல் எலக்ஷனிலும் போலீஸ் ஆபீசர்களது "தவறுதல்"களால் சில தப்பிதங்கள் நடந்தது. இதை ஆதாரமாய் வைத்துக் கொண்டு (தான் தோல்வி அடைந்து விடக் கூடும் என்று கருதிய) ஒரு அபேக்ஷகர் முடிவு சொல்லும் (டிக்ளேர் செய்யும்) அதிகாரிக்கு மறுபடியும் கொஞ்சம் பணம் கொடுத்து தன்னையே டிக்ளேர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதுகேட்ட மற்ற அபேட்சகரும் ஒரு மறுபடியும் கொஞ்சம் பணம் கொடுத்தார். இரண்டையும் வாங்கிக் கொண்டார். அதிகாரி யோசித்தார் யாருக்கு அனுகூலம் செய்தால் தனக்கு நல்லது என்று பார்த்தார் மற்றும் பல சங்கதிகளைப்பார்த்து ஒரு கட்சிக்கு அனுகூலமாக தீர்ப்பு கூறி கொஞ்ச ஓட்டு பெற்ற "கனவானையே" டிக்ளேர் செய்தார். வெற்றிபெற்றதாக முடிவு கூறினர். அதற்கு ஏதோ காரணமும் குறிப்பிட்டு விட்டார். ஆகவே மறுபடியும் பணம் கொடுத்த எதிர் அபேட்சகர் தைரியமாய் அதிகாரி வீட்டுக்குப் போய் "இதுதானா யோக்கியதை" என்றார். அதிகாரி ரகசியமாய் வீட்டுக்குள் அழைத்துவாங்கின பணத்தைக்கையில் கொடுத்து "சந்தர்ப்பம் வேறு விதமாய் போய்விட்டதால் இப்படிச்செய்ய நேர்ந்தது ஆனால் வருத்தப் படாதே கோர்ட்டுக்குப் போனால் உனக்கு தான் அனுகூலமாகும் மன்னித்துக் கொள் என்று கேட்டுக் கொண்டார். அபேட்சகனோ ஓட்டர் வீட்டுக்கு அலைந்துபோனாமல் எலக்ஷன் ஆபீஸ்விட்டுக்கு அலைந்தது போனாமல் இனி கோர்ட்டுக்கும், வக்கீல் வீட்டுக்கும் நீதிபதி வீட்டுக்கும் அலையும்படியா? செய்கிறாய் என்று ஏதோ தனக்கு மிக புத்தி வந்து விட்டது போல் பேசியதுமல்லாமல் அப்படித்தான் கோர்ட்டில் அனுகூலமானால் எனக்கு என்ன பிரயோஜனம்? இப்பொழுது நீ அனுகூலம் செய்திருந்தால் எனக்கு சமீபத்தில் நடக்கும் தலைவர் தேர்தலில் 1000மோ, 2000மோ கிடைத்திருக்கும் அதெல்லாம் பாழாய் போனது மல்லாமல் இன்னமும் 500 சோ 1000மோ செலவு அல்லவா செய்ய வேண்டி இருக்கிறது.

அதற்கும் இனி அப்பீல் செய்தால் அப்புறம் வேறே செலவு செய்யவேண்டி இருக்கிறது. இவ்வளவும் செய்து அனுகூலம் ஆகாமல் போய்விட்டால் என்ன பண்ணுவது? அல்லது நமக்கு அனுகூலம் ஆச்சுதென்றே வைத்துக்கொண்டாலும்? மந்திரிகளோடு மந்திரியாய் நாற்காலியில் சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டு வருவதைவிட வேறு என்ன செய்ய இடமுண்டாகும். ஆதலால் இனி மேல் இந்த கிரகத்தைப்பற்றி நினைப்பதே இல்லை. நீ மாத்திரம் நல்லா இருந்தால் சரி, கடவுள் தான் உன்னைக்கேட்கவேண்டும். என்று சொல்லிக்கொண்டு வெளியில்வந்துவிட்டார். அதிகாரி உடனே கதவை மூடித்தாழ்போட்டுக்கொண்டார். என்பதாக ஒரு கதை தேசிய மதத்தைச்சேர்ந்த சுயராஜ்ய புராணத்தில் எலக்ஷன் அத்தியாயத்தில் காணப் பட்டது.

இதுநிற்க இன்னும் சிலர் தங்கள் எலக்ஷனில் எவ்வளவு பணம் செலவு செய்தாலும், அதிகாரிகளுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும், சிபார்சு பிடித்தாலும் ஓட்டர்களுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும், வெற்றிபெற முடியாது என்று கருதினால் எதிர் அபேட்சகரை அடிப்பதாக, உதைப்பதாக மிரட்டுவதும், அடிக்க ஏற்பாடு செய்வதும், கொலை செய்யவே ஏற்பாடு செய்வதுமான காரியங்கள் நடைபெறுகின்றன. இதற்கும் இரண்டொரு கதைகள் தேசிய புராணத்தில் இரண்டோரு கதைகள் இருக்கின்றன.

ஆனால் அவற்றை சிறிது நாள் பொறுத்து வெளியிடுவேன். இந்த மாதிரி அதிகாரிகளை பணம்கொடுத்து "தொந்திரவு" செய்வதும் அபேட்சர்களை அடிதடி, கலகம், வசவு, கொலை முதலியவைகள் செய்து தொந்திரவு செய்வதுமான காரியங்கள் ஸ்தலஸ்தாபனங்களில் உள்ள இரண்டு முக்கியமான குற்றங்களினாலேயேதான் நடைபெறுகின்றன அவை என்னவெனில்.

1. ஸ்தலஸ்தாபன தலைவர்கள் வசம் கண்டிராக்டுகள் கொடுக்கும் அதிகாரம் இருப்பது.

2. ஸ்தலஸ்தாபனத்திற்கு உத்தியோகஸ்தர்கள் — சிப்பந்திகள் நியமிக்கும் அதிகாரம் இருப்பது. ஆகிய இந்த இரண்டு காரியங்களையும், ஸ்தலஸ்தாபனங்களின் தலைவர்களிடம் இருந்து எடுத்துவிட்டால் அதாவது கண்டிராக்ட் கொடுப்பதும், சிப்பந்திகளை நியமிப்பதும் இவர்களிடம் வேலை வாங்கவுமான இரண்டு காரியங்களையும் பிரசிடெண்ட்—சேர்மென் என்பவர்களிடம் இருந்து எடுத்துவிட்டால் கண்டிப்பாய் மேலே குறிப்பிட்டமாதிரியான குற்றங்கள் நடக்கவே நடக்காது. அன்றியும் தலைவர் ஸ்தானங்களுக்கு வருகின்றவர்களும், யோக்கியமாய் இருக்க முடியும்.

அப்படிக்கில்லாவிட்டால் எவ்வளவு யோக்கியமும், நாணயமுமான தலைவர்கள் தலைமை ஸ்தானத்துக்கு வந்தாலும் தங்களைத் தலைவர்களாக்குவதற்கு உதவி செய்ததாகச் சொல்லிக்கொள்ளப்படும்—கருதப்படும் நபர்களுக்கு எல்லாம் உதவி செய்துதீரவேண்டியதாய் அவரவர்கள் "மனசாட்சி" வற்புறுத்தியேயிருக்கிறது.

இதை உத்தேசித்தே அனேகம்பேர் ஒவ்வொரு கட்சியில் சேர்ந்துகொண்டு "மகா அக்கரை"யுடன் பாடுபடவேண்டியதாய்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க

வேண்டுகோள்.

நமது வேண்டுகோளின்படி அனுப்பப்பட்டிருந்த சுயமரியாதைக் கிளைச்சங்கங்களின் பெயர்கள் சென்ற வாரம் தெரிவித்திருந்தோம். அதன் பின் வந்த சங்கங்கள் வருமாறு: —

28 சாத்தூர், 29 கிளயிரால் (தூத்துக்குடி) 30 ஸ்ரீவில்லிப்புத்தூர், 31 பவானி, 32 குமாரபாளையம், 33 அம்பலூர், 34 காரைக்குடி, 35 தேவகோட்டை, 36 கோட்டையூர், 37 திருமயம், 38 முத்துப்பேட்டை, 39 சோளவந்தான், 40 கட்குடிபட்டி, 41 கிள்ளான், 42 ஆலக்கிராமம், 43 மதுரை, 44 குளத்தூர், 45 திருமலைச்சேரி, 46 சென்னை எழும்பூர்.

மற்றும் உள்ள சங்கங்களையும், புதுப்பிக்கப்பட்ட சங்கங்களையும் நிர்வாகசபை அங்கத்தினர்கள் பெயர்கள் உள்பட சீக்கிரம் தெரிவிக்கவேண்டுகிறோம்.

எது நல்ல ஜோடி?

“வருணாச்சிரம தருமம் தோழர் ராமச்சந்திரய்யர் “ஹரி ஜனங்கள்” என்பவர்களை ஹிந்துக்கள் அல்ல என்று சொன்ன விஷயத்தைச்சுயமரியாதை இயக்கத்தோர் ராமசாமியும் ஆமோதித்து விட்டாராகையால் ராமச்சந்திர அய்யரும் ராமசாமியும் ‘நல்ல ஜோடி’ என்று சுதந்திரச்சங்கு என்னும் பத்திரிகை எழுதி இருக்கிறது.

என்றாலும் அதே பத்திரிகையின் வேறொரு இடத்தில் அந்த ஜோடிக்கு உவமை சொன்னதில் உண்மையைச் சொல்லி விட்டது. எப்படி எனில் இரண்டும் சரியான ஜோடி அல்ல வென்றும் சிறிது கூட பொருந்தாத ஜோடி என்றும் மக்கள் நன்றாய் உணரும்படி தன் மனதிலுள்ள உண்மையை தன்னை அறியாமலே வெளிப்படுத்தி விட்டது.

அதாவது, “இருவரும் சேர்ந்த நல்ல ஜோடி என்பது காராம் பசுவும் காளைஎருமையும் ஒரு வண்டியில்கட்டப்பட்டு ஓட்டப் படுவதுபோலிருக்கிறது” என்று உவமை காட்டி எழுதி இருக்கிறது. ஆகவே காராம் பசுவும் காளை எருமையும் சரியான ஜோடி என்று யாராவது ஒப்புக்கொள்ளுவார்களா? ஒரு நாளும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். சுதந்திரச்சங்கு ஆசிரியரும்கூட தான் ஒரு குறிப்பிட்ட ஜாதியார் என்கின்ற முறையிலிருந்து விலகி தனியே நடு நிலையில் நீதிபதி என்கின்ற முறையில் இருந்து காராம்பசுவையும் காளை எருமையையும் ஒன்றாய் நிறுத்திப்பார்ப்பாரானால் இரண்டும் சரியான ஜோடி என்று ஒரு நாளும் தீர்ப்பெழுதமாட்டார். ஆனால் இப்படி எழுதுவதற்கு உள்ள காரணங்களை வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் வேலையைப் பிரதானமாகக் கருத இதுசமயம் நமக்கு நேரமில்லை இங்கு இடமும் இல்லை.

நாம் சேர்க்கும் ஜோடி.

ஆனால் நாம் இப்போது ஒரு ஜோடியைச் சேர்த்து வெளியில் காட்டுகிறோம். இது சரியான ஜோடியா? அல்லவா என்று நடு நிலைக் கண்களைக்கொண்டு பார்த்து முடிவுகாணத் தோழர்களை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

அதாவது:- “சுதந்திரச் சங்கு பத்திராதிபரின் தலைவரான “மகாத்மா” காந்தியையும் தோழர் வருணாச்சிரம ராமச்சந்திரய்யரின் தலைவரான “லோககுரு” சங்கராச்சாரியாரையும் ஒரு ஜோடியாகச் சேர்க்கிறோம். இரண்டையும் சரிபார்த்து எது நல்ல ஜோடி அதாவது சுதந்திரச்சங்கு மூலத்தில் சேர்த்துவிட்டு வியாக்கியானத்தில் பிரித்துவிட்ட ஜோடி நல்ல சரியான ஜோடியா? அல்லது “குடி அரசு” சேர்த்த ஜோடி நல்ல சரியான ஜோடியா? என்பதை நல்ல நடுநிலைமைக் கண்ணாடிகொண்டு பார்த்து முடிவுசெய்யுங்கள். ஒருசமயம் “குடி அரசி”ன் கண் காமாலைக் கண்ணாயிருந்தாலும் இருக்கலாம். அது பார்க்கும் கண்ணாடி வர்ண (துவேஷ) க்கண்ணாடியாய் இருந்தாலும் இருக்கலாம். ஆதலால் வாசகர்களையே ஆராய்ந்து தீர்ப்புச் சொல்லும்படி விரும்புகிறோம்.

1. சங்கராச்சாரி:- இந்துமதத் தலைவர், இந்துமத அதிகாரி, இந்து மதத்தைக் காப்பவர். காந்தியும் தானே இந்துமதமாய் இருப்பவர். இந்துமதத்தைக் காக்கவே சுயராஜ்யம் கேட்பதாய்ச் சொல்லுகிறவர்.

2. சங்கராச்சாரி:- இந்துமத வேதசாஸ்திரபுராண இதிகாசங்களை ஒப்புக்கொண்டு பிரசாரம் செய்பவர். காந்தியும் இந்துமத வேதசாஸ்திர புராண இதிகாசம் ஆகியவைகளை ஒப்புக்கொண்டு வியாக்கியானம் எழுதிபிரசாரம் செய்பவர்.

3. சங்கராச்சாரி வருணாச்சிரமத்தையும் “பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன்” என்கின்ற 4-வருணங்கள் பிறவியிலேயே உண்டு என்பவர். காந்தியும், வருணாச்சிரமமும் மேல்கண்ட நான்கு வருணப் பிறவியிலேயே உண்டு என்பவர்.

4. சங்கராச்காரியும், சுதர்மம் அதாவது அவனவன் வருணத்திற்கேற்றதொழிலையே அவனவன்செய்ய வேண்டும்என்றுஉபதேசிப்பவர். காந்தியும் அவனவன் வருணதர்மத் தொழிலையே செய்யவேண்டும் என்று சொல்லுபவர்.

6. சங்கராச்சாரியும் ஜாதிப் பிரிவை ஒப்புக்கொள்வதுடன் ஒரு ஜாதிக்கு மற்றொரு ஜாதி சமபந்திபோஜனமோ, கலப்புமணமோ கூடாது என்று சொல்லுபவர். காந்தியும் ஜாதிப் பிரிவை ஒப்புக்கொண்டும் கலப்புமணம் சமபந்திபோஜனம் ஆகியவைகளை ஒப்புக்கொள்ளாமலும் இருக்கிறவர். சங்கராச்சாரியும் பிறவியில் ஜாதிஉண்டுஎன்கின்றவர். காந்தியும் பிறவியில் ஜாதி உண்டு என்கிறவர்.

7. சங்கராச்சாரியும் முன்பின் ஜன்மம், தலைவிதி, கர்மம் என்பவைகளை ஒப்புக்கொள்ளுகிறவர் காந்தியும் முன்பின்ஜன்மம் கர்மம் தலைவிதி ஆகியவைகளை ஒப்புக்கொள்ளுகிறவர்.

8. சங்கராச்சாரி மனுதர்மம் பராசரதர்மம் ஆகியவைகளை ஒப்புக்கொள்ளுபவர் காந்தியும் மனுதர்மம் பராசரதர்மம் ஆகியவைகளை ஒப்புக்கொள்ளுபவர்

9. சங்கராச்சாரி தன்னை லோககுரு என்று அழைப்பதை ஒப்புக்கொள்ளுபவர். காந்தியும் தன்னை மகாத்மா என்று அழைப்பதை ஒப்புக்கொள்ளுபவர்.

10. சங்கராச்சாரி பரம சிவனுடைய அம்சமாக கருதப்பட பார்ப்பனர்களால் புராணக் கதைகள் எழுதி பிரசாரம் செய்யப்படுபவர். காந்தியும் மகாவிஷ்ணு அவதாரமாய் கருதப்பட பிராமணக் கவிகளால் எழுதியும் சுதந்திரச்சங்கு முதலிய அனேக பார்ப்பனர்களால் பிரசாரமும் செய்யப்படுபவர்.

11. சங்கராச்சாரியும் இந்தமாதிரி படத்தையும், பிரசாரத்தையும் வெட்கப்படாமல் பொறுத்துக்கொள்ளுகிறவர் காந்தியும் வெட்கப்படாமல் இப்படிப்பட்ட பிரசாரங்கள் நடைபெறுவதை ஆக்ஷேபிக்காமல் பார்த்துக்கொண்டிருப்பவர்.

12. சங்கராச்சாரி தீண்டாதாருக்குக் கோவில் பிரவேசம் கொடுத்தால் இந்துமதமே போய்விடும் என்பவர். காந்தியும் தீண்டாதாருக்குக் தனிப்பிரதிநிதித்துவம் கொடுத்தால் இந்துமதமே போய்விடும் என்பவர்.

13. சங்கராச்சாரி தீண்டாதார் கோவிலுக்குள் போனால் கோவில் தீட்டுப்பட்டுவிடும். என்கிறார்.

காந்தி, புண்ணியார்ச்சனை (சம்ரோக்ஷணை) செய்து தீட்டைப் போக்கிக் கொள்ளலாம் என்கிறார்.

14. சங்கராச்சாரி மனிதனுக்கு தீண்டாமை உண்டு என்கிறார். காந்தியும் மனிதனுக்கு தீண்டாமை உண்டு என்கிறார்.

15, சங்கராச்சாரி மாடு தின்பவர்கள்—சண்டாளர்கள், கோவிலுக்குள் போக உரிமை இல்லாத ஜாதி என்கிறார்.

காந்தியும் மாடு தின்பவர் கீழ்ஜாதி விலுக்குள் அனுமதிக்கக் கூடாத ஜாதி என்கிறார்.

16. சங்கராச்சாரி ராமராஜ்யம் வேண்டுமென்கிறார். காந்தியும் ராமராஜ்யம் ஸ்தாபிப்பதற்காகவே உயிர் வாழ்கிறேன் என்கிறார்.

17. சங்கராச்சாரி சுயராஜ்யத்தை விட மதம் பெரியது என்கிறார். காந்தியும் மதத்திற்காகத்தான் சுயராஜ்யம் கேட்கிறேன் என்கிறார்.

18. சங்கராச்சாரி பொது உடைமைக் கொள்கை கூடாது. அது கடவுள் ஆக்கினைக்கு விரோதம் என்கிறார்.

காந்தியும் பொது உடைமைக் கொள்கை கூடாது. அதை ஒழிக்கத்தான் உப்புசத்தியாக்கிரகம் ஆரம்பித்து மக்கள் கவனத்தை அதில் திருப்பிவிட்டேன் என்கிறார்.

19. சங்கராச்சாரிக்கு மடம்உண்டு காந்திக்கும் மடம் (ஆச்சிரமம்) உண்டு.

20. சங்கராச்சாரிக்கும் அடிமைகள்போன்ற பக்தர்கள் உண்டு. காந்திக்கும் அடிமைகள் போன்ற பக்தர்கள் உண்டு.

21. சங்கராச்சாரிக்கும் முதலாளிமார்கள் ஊரார் உழைப்பில் வாழ்கின்றவர்கள் பணம்கொடுத்து பிரசாரம் செய்விக்கிறார்கள்.

காந்திக்கும் முதலாளிமார்கள் ஊரார் உழைப்பில் வாழுகிறவர்கள் பணம்கொடுத்து பிரசாரம் செய்விக்கிறார்கள்.

22. சங்கராச்சாரியும் எதற்கும் பகவான் கட்டளை இடுகிறதாகச் சொல்லுகிறார்.

காந்தியும் எதற்கும் பகவான் கட்டளையிட்டதாகச் சொல்லுகிறார்.

23. சங்கராச்சாரி பூஜை ஜபம் செய்கிறார். காந்தியும் பிரார்த்தனை பஜனை செய்கிறார்.

24. சங்கராச்சாரிக்கு டி. ஆர். ராமச்சந்திரய்யர்போன்ற வருணாச்சிரமிகள் உதவியாளர்களாக இருக்கிறார்கள்.

காந்திக்கும் மாளவியாபோன்ற வருணாச்சிரமிகள் உதவியாளர்களாக இருக்கிறார்கள்.

25. சங்கராச்சாரிக்கு காவி உடுத்தியிருந்தாலும் சென்றவிடமெல்லாம் இந்திரபோகம். காந்திக்கும் அரைத்துணி கட்டியிருந்தாலும் சென்றவிடமெல்லாம் ராஜபோகம் நடக்கிறது.

26. சங்கராச்சாரி காலில் ஜனங்கள் விழுகின்றார்கள். காந்திகாலிலும் ஜனங்கள் விழுகின்றார்கள்.

27. சங்கராச்சாரியையும் பார்ப்பனர்கள்தான் லோககுருவாக்கினார்கள்.

காந்தியையும் பார்ப்பவர்கள்தான் மகாத்மா என் அவதார புருடராய் ஆக்கினார்கள்.

28. சங்கராச்சாரி விக்கிரக ஆராதனையை ஆதரித்துப் பிரச்சாரம் செய்கிறார்.

காந்தியும் விக்கிரக ஆராதனையை ஆதரித்து அதை நிலைத்துவைக்க உதவி செய்கிறார்.

29. சங்கராச்சாரி பெண்களை சீதை நளாயினி சந்திரமதிபோல் இருக்கச் சொல்லுகிறார். காந்தியும் பெண்களை சீதை, நளாயினி, சந்திரமதிபோல் இருக்கச் சொல்லுகிறார்.

30. சங்கராச்சாரி படம் கடவுள் படம்போல் பாவிக்கப்பட்டு அதை வீடுகளில் கோவில்களில் பூஜையில் வைக்கப்பட்டிருக்கிறது.

காந்தி படமும் கடவுள் படம் போல் பாவிக்கப்பட்டு அனேக வீடுகளிலும் ரதம், தேர்களிலும் கூட வைத்துப் பூஜிக்கப்படுகிறது.

ஆகவே ஒரு நல்ல சரியான ஜோடிசேர்க்க சுதந்திரச் சங்கு இனியும் என்னஎன்ன விஷயங்களில் பொருத்தம் தேவை என்று கருதுகின்றது என்று தெரிந்தால் நம்மால் ஆனவரை முயற்சித்துப் பார்க்கின்றோம். முடியாவிட்டால் இவ்வளவுதான் இதற்கு மேல் நல்ல ஜோடி சேர்க்க நம்மால் ஆகவில்லை என்று கண்ணியமாய் ஒப்புக்கொள்ளுகிறோம்.

பவானிசிங் விடுதலை.

சேலம் தோழர் பவானிசிங் கூடலூர் சிறையினின்று 17-1-33ந் தேதி காலை விடுதலையடைந்தார் ஒரு நிருபர்.

குடி அரசு.

ஈரோடு 1933 ஜனவரிமீ 22-உ

வரவேற்கின்றோம்.

—0—

45 மாத காலமாய் விசாரணை நடந்துவந்த "மீரத் சதிவழக்கு" கேசு ஒரு வழியில் முடிவடைந்துவிட்டது. அதாவது 27 எதிரிகளுக்கு, 3 வருஷ முதல் ஆயுள்பரியந்தம் சிறைக்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த தண்டனையைப்பற்றி நாம் சிறிதும் கவலைப்படவில்லை. இந்த 27 பேர் மாத்திரம் அல்ல இன்னும் ஒரு 270 பேர்களும் சேர்ந்து தூக்கில்போடப்பட்டிருந்தாலும்சரிநாம்அதற்காகக் கவலைப்படப்போவதில்லை. ஏனென்றால் இந்தத் தோழர்கள் சிறையிலிருப்பதாலோ, தூக்கில் கொல்லப்படுவதாலோ அவர்களது கொள்கையாகியபொதுவுடமைக்கொள்கைஎன்பது,அதாவதுமுதலாளிகளின் ஆதிக்க ஆட்சியை சிதைத்து, நசுக்கி சரீரத்தினால் பாடுபடுகின்ற மக்களுடைய ஆட்சிக்கு உலக அரசாங்கங்களையெல்லாம் திருத்தி அமைக்கவேண்டும் என்கின்ற கொள்கையோ, உணர்ச்சியோ, அருகிப்போய்விடும் என்கின்ற பயம் நமக்கு இல்லை. அல்லது இன்று தண்டனை அடைந்த தோழர்கள் தான் இக்கொள்கைக்கு கர்த்தாக்கள் ஆவார்கள், கர்மவீரர்கள் ஆவார்கள் ஆதலால் இவர்கள் போய்விட்டால் இந்தக் கொள்கையைக்கொண்டுசெலுத்த உலகில்வேறு ஆட்கள் இல்லாமல் போய்விடுமே என்கின்ற பயமும், நமக்கு இல்லை. அல்லது இந்த தோழர்கள் ஜெயிலில் கஷ்டப்படாமலோ, அல்லது தூக்கு மேடையில் உயிர்விடாமலோ, இருப்பார்களானால் உலகத்தில் சுகமாக நெடுநாளைக்கு ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு வாழப்போகிறவர்கள் என்றுவது நாம் கருதவில்லை.

உண்மையைப் பேசப்போனால் அவர்கள் உண்மையான கர்மவீரர்களாய் இருப்பார்களானால் வெளியில் இருப்பதைவிட சிறையில் கவலையற்று சுகமாகவே இருக்கநேரிடும். ஏனெனில் உண்மையாக வேலைசெய்துவரும் சமதர்மத் தொண்டர்களுக்கு வெளியில் இருக்கும் கவலையும், தொல்லையும், பொருப்பும் மற்றும் அவர்களுடைய வாழ்க்கையில் இருக்கும் பலவித உபத்திரவங்களும் கொஞ்சநஞ்சமல்ல.

கொள்கையில் இருக்கும் உண்மை ஊக்கமே இவ்வளவையும், சகித்துக்கொண்டு வேலை செய்யச் சொல்லுகின்றது.

ஆனால் இத்தொண்டர்கள் ஜெயிலில் இருப்பதின் மூலம் அவர்கள் ஜெயிலில் வதியும் ஒவ்வொருவினாடியும், அவர்களது கொள்கையானது அவர்களைப்போன்ற 1, 10, 100, 1000 கணக்கான தொண்டர்களைத்தட்டி எழுப்பி ஊக்கப்படுத்திக்கொண்டே தான் இருக்கச்செய்யும். அன்றியும் தூக்குமேடையில் உயிர்விட்டு இருப்பார்களேயானால் அவ்வுயிரின் ஞாபகம் எப்பொழுதும் உண்மை தொண்டர்களின் உள்ளம்விட்டு அகலாமல் சதா அவர்களைத்தட்டி ஓட்டிக்கொண்டேதான் இருக்கும். இன்றையத் தினம் உலகில் உள்ள முக்கிய கொள்கைகளில் பல அவை சரியாயிருந்தாலும், தப்பாய் இருந்தாலும் அக்கொள்கையைக் கைக்கொண்டவர்களின் தியாகத்தை மதித்தே கொள்கைகள் பரவவும், நிலைநிறுத்தவும் செய்கின்றது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. ஆனால் பிற்காலத்தில் அதற்கு ஆயுள் குறைவும், சக்திக்குறைவும், ஏற்படுகிறது என்பது கால தேச வேறுபாட்டாலும், அபிப்பிராய வேறுபாட்டாலும் கொள்கையின் பயனற்ற தன்மையாலுமே யொழிய வேறில்லை.

இன்று எத்தனையோ கொள்கைகள்,பிரசாரம் பண்ணப் பதினாயிரக்கணக்கான ஆட்கள் இருந்தும் பிரசாரத்திற்கு பத்துலட்சக்கணக்கான ரூபாய்கள் வருமானம் இருந்தும் அவைசடங்கு முறைபோல் நடைபெறுவதையும், சில மறைந்துபோய்க்கொண்டு வருவதையும், மறைந்தே போய்விட்டதையும் நாம் சரித்திரங்களில்பார்ப்பதோடு மாத்திரமல்லாமல் நேரிலும் பார்த்து வருகின்றோம். ஆகவே இன்றைய உலக நிலையில்-சிறப்பாக இன்னாட்டு மக்களின் உணர்ச்சி நிலையில் இருந்து ஒரு அறிவாளியாயிருப்பவன் சிந்தித்துப் பார்ப்பானேயானால் பொதுவுடைமைக்கொள்கை என்பதை இனி இந்தமாதிரி 27-பேரை தண்டித்தோ, அல்லது, 2700000 இருபத்தி எழுலட்சம் பேரை "சமணர்களைக்கழுவேற்றியது" போல் நடுத்தெருவில் நிறுத்தி கழுவேற்றிக்கொன்றோ செய்வதன்மூலம் அடக்கிவிடலாம் என்று நினைப்பது கொழுந்துவிட்டெறியும் பெரும் நெருப்பை நெய்யைவிட்டு அணைத்துவிடலாம் என்று எண்ணுவதுபோல்தான் முடியும்! கண்டிப்பாய் அப்படித்தான் முடியும்!! கட்டாயம் அப்படியேதான் முடியும்!!!

என்? எப்படி? என்கின்ற கேள்விகள் பிறக்கலாம். இன்றையத் தினம் பொதுவுடைமைக் கொள்கை உணர்ச்சி என்பது பெரிதும் இந்தியாவில் ஏற்பட்டதல்ல. ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் காட்சிகளையும், அவற்றின் அனுபவங்களையும் கண்டு தோன்றிய உணர்ச்சியேயாகும். ஐரோப்பாவில் சரிபகுதிக்கு மேற்பட்ட விஸ்தீரணமுள்ள தேசம் ஆகிய ரஷியா முழுவதும் பொதுஉடைமைக் கொள்கையே தாண்டவமாடி ஆட்சிபுரிகின்றது. அதன் ஜனத்தொகை இங்கிலாந்தைப்போல் நான்கு மடங்குகொண்டது. மற்றும் ஜர்மனி தேசத்திலும் பொது உடைமைக்கொள்கை உணர்ச்சி கரைபுரண்டு ஓடுகிறது. இங்கிலாந்திலும்அமெரிக்காவிலும்பிரான்சிலும், சைனாவிலும் பொதுஉடைமைக்கக்ஷிகள்தங்களதுபிரசாரங்களை தாராளமாய்நடத்துகின்றன. ஜப்பானில் 1932-ம் வருஷத்தில் மட்டும் 7000 பொதுவுடைமைக் கட்சியைச்சேர்ந்தவர்கள் சிறைசென்றதும், இப்பொழுது 2000 பேர்சிறைபிடிப்பட்டதும், ஜப்பானில் பொதுவுடைமைக்கொள்கை உரம பெற்றிருப்பதை நனகு விளக்குகின்றது.

ஸ்பெயின் தேசத்திலோ இன்றோ,நாளையோ இதற்குள் ஒருசமயம்கடந்து இருக்குமோ என்று சொல்லும்படியாகப்பொதுஉடைமைக் கிளர்ச்சியும், புரட்சியும் தாண்டவமாடுகின்றன. இவைகள் ஆங்கிலப் பத்திரிகைகளில் காணப்படும் விஷயங்களே தவிர கற்பனை என்றோ, கட்டுக் கதை என்றோ சொல்லி ஏய்த்துவிட முடியாது.

இந்தியாவிலும் இன்றும் வாலிபர்கள் உள்ளத்தை அறியும் கருவி ஒன்று இருந்து பரிசோதித்துப் பார்ப்போமேயானால் பத்து லக்ஷக்கணக்கான வாலிபர்கள் உள்ளம் முழுவதையும் கவர்ந்துஅவர்களது இரத்தத்தைக் கொதிக்கச் செய்துகொண்டிருக்கும் உணர்ச்சி பொது உடைமை கொள்கையைப்பற்றிய தென்றே தான் கண்டுபிடிக்கமுடியும். அல்லாமலும் கொள்ளை நோய்க்கும் தொத்து நோய்க்கும் பட்டினிக்கும், தொல்லையில்லாத் திண்டாட்டத்திற்கும், மூப்புக்கும்,சாக்காட்டிற்கும் நெஞ்சடைப்பிற்கும், தற்செயலாய் ஏற்படும் ஆபத்துக்கும் பலியாகக் கொடுக்கப்படும், —கொடுத்துத்தீர வேண்டியதாயிருக்கும்-கொடுக்காமலே கோழிக்குஞ்சை கருடன்தூக்குவதுபோல் நமக்குத் தெரியாமலே போகும்படியாயிருக்கும் இந்த அற்ப உயிரை, அதாவது ஒரு மனிதனுடைய சரீரத்தில் உள்ள ரோமம் முழுவதும் எண்ணிப் பார்த்து அதில் ஒரு ரோமம் குறைந்தால் அந்த மொத்த எண்ணிக்கை எவ்வளவு விகிதம் குறைவுபடுமோ அதற்குச் சமானமான அதாவது இந்தியாவின் 35 கோடி ஜனத்தொகையில் ஒருமனிதன் குறைந்துவிட்டால் 35 கோடியில் எத்தனை விகிதாச்சாரம்குறையுமோ அதுபோன்ற நிலையில் உள்ள உயிர்களைஇப்பேர்ப்பட்ட அதாவது 100 க்கு 99 மக்கள் ஏழைகளாக, கூலிகளாக, இழிவான வாழ்க்கை நடத்துபவர்களாக இருந்துகொண்டு பார்ப்பனர்களாலும்,பணக்காரர்களாலும், அரசாங்கங்களினாலும் வதைக்கப்படும் பூச்சி புழுப்போன்ற மக்களின் விடுதலைக்கும், அவர்களது மானவாழ்க்கைக்கும், அவர்களது உழைப்பின் பயனை அவர்களே அனுபவித்துக் கொண்டிருப்பதற்குமான காரியத்திற்கு உயிர்விட நேர்ந்தால் எந்தப் பேதை பின்வாங்குவான், மனவருத்தமடைவான் என்பதை சிந்தித்துப பாருங்கள்.

ஆகவே மீரத்வழக்கு சரியாய் விசாரணை செய்திருந்தாலும் சரி, அக்கிரமமாய் விசாரித்து இருந்தாலும் சரி, ஒருகாசுசெலவில்லாமல் விசாரித்து இருந்தாலும் சரி, ஒருகோடி ரூபாய் செலவுசெய்து வசாரணை நடத்தி இருந்தாலும் சரி. மற்றும் அதன தீர்ப்பு நியாயத் தீர்ப்பாய் இருந்தாலும் சரி, அநியாயமான தீர்ப்பாய் இருந்தாலும் சரி, அவற்றில் பிரவேசித்து நேரத்தையும் யோசனையையும் பாழாக்க நாம் சிறிதும கவலைகொள்ளாமல் மீரத்து முடிவை நாம் மேளதாளத்தோடு வரவேற்பதுடன், தண்டனை அடைந்த தோழர்களை மனமார, வாயார, கையாரப் பாராட்டுகின்றோம். முக்காலும் பாராட்டுகின்றோம்இனியுமநமக்கும்நம்போன்றவாலிபர்களுக்கும்அதாவதுநம்போன்ற மன உணர்ச்சிகொண்ட வாலிபர்களுக்கும் இந்தப் பெரும்பேறு கிடைக்கப் பெறும நிலையை அடையமுடியவில்லையே என்று நமக்காகவும் எமதருமைத்தோழர்களான வாலிபர்களுக்காகவும்

வருந்தி மற்றுமொரு முறை வரவேற்கின்றோம்.

நிற்க சர்க்காரால் இப்பிரசாரங்களை அடக்குவதற்கு தங்களுக்கு ஒரு ஆதாரம்வேண்டுமே என்கின்ற கவலைகொண்டு எதிரிகள் என்பவர்கள் பாலாத்காரம் செய்ய பிரசாரம் செய்தார்கள் என்று ஒரு சாக்கு கற்பிக்கப்பட்டிருக்கிறது. நம்மைப்பொருத்தவரை பலாத்காரம் என்பதை எப்போதும் வெறுத்தே வந்திருக்கின்றோம். பலாத்காரம் இல்லாமலே நமது லட்சியங்கள் நிறைவேற வேண்டும் என்றே ஆசைப்பட்டு வந்திருக்கின்றோம். ஆனால் எந்த சமயத்திலும் பலாத்காரம் கூடவே கூடாதென்றும், நமக்கு விரோதமாக ஏற்படும் பலாத்காரத்தை யெல்லாம் பொறுத்துக்கொண்டே இருக்கவேண்டும் என்றும் சொல்லநம்மால் முடியவில்லை. பாம்பை அடிக்காதீர்கள் என்று சொல்லலாமே தவிர பாம்பு கடிக்கவரும் போது தடுக்காமலோ, தட்டாமலோ இருந்து முத்தமிட்டு கடிபடுங்கள் என்று சொல்லக்கூடிய இயற்கைக்கு மீறியதான போலி அஹிம்சையை வேஷத்துக்காக உபதேசிக்க இப்போதுநாம்தயாராய் இல்லை.

தவிரவும் 100க்கு 90மக்களாய் உள்ளவர்களை வஞ்சித்து, வதைத்து, கொடுமைப்படுத்தி, அழுத்தி வைத்து கொள்ளை கொள்ளும்தன்மையை வெளியிடுவது பலாத்காரமானால் இவ்வித பலாத்காரத்தை மனிதத்தன்மை யுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் வரவேற்க வேண்டும் என்றும், இவ்வித பலாத்காரத்தில் தவராது இறங்கி வேலை செய்யவேண்டும் என்றும் தான் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம். யோக்கியமான சர்க்காருக்கு பலாத்காரம் உண்டாகாமல் இருப்பதைத் தடுக்க வேண்டும் என்கின்ற உணர்ச்சி கடுகளவாவது இருக்குமானால் இவ்விதப்பிரசாரம் தாராளமாய் நடைபெறும் விஷயத்தில் அதற்கு இடையூறாய் ஏற்படும் எவ்வித பலாத்காரச் செய்கைகளையும் தடுத்துப் பிரசார பாதைகளைச் செப்பனிட்டு ஒழுங்காக்கி [illegible]க்க வேண்டியது பொறுப்பும் கடமையுமாகும். ஆதலால் இவ்விதபோலி பலாத்காரப்பூச்சாண்டிக்குபொதுவுடமைக் கொள்கையில் ஆர்வமுள்ள தோழர்கள் பயப்படமாட்டார்கள், என்றும் உண்மையிலேயே எந்த வழியிலும் பலாத்காரம் ஏற்படுவதை வெறுப்பார்கள் என்றுமே நம்புகின்றோம்.

அடக்குமுறை பயன்படுமா? வெற்றிபெறுமா என்கின்ற விஷயத்தில்நாம் ஒரு சிறிதும் கவலைகொள்ளவும் இல்லை. அடக்குமுறையில் இந்த இயக்கம் தோல்வி அடைந்து போகுமோ என்று பயப்படவும் இல்லை. இந்த அபிப்பிராயத்தை நாம்பிரத்தியட்ச ஒரு அனுபவத்தைக்கொண்டே சொல்லுகின்றோமே அல்லாமல் நமது சொந்த தைரியத்தையே ஆதாரமாய்க் கொண்டு சொல்லுவதாக யாரும் நினைக்கக் கூடாதென்றே கருதுகின்றோம். ஏனெனில் பொதுவுடமைக் கொள்கை பிரசாரம் செய்யப்படுவதை தடுக்கவோ அடக்கவோ அடக்கு முறைகளைக்கையாளும் விஷயத்தில் ரஷ்ய சார் சக்கரவர்த்தி அரசாங்கத்தை விட இனி உலகில் வேறு யாராலாவது அதிகமான அடக்கு முறையைக் கையாண்டு விட முடியும் என்பதாகநாம்கருதிவிட முடியாது. அன்றியும் சாரை விட கொடுங்கோன்மை அடக்கு முறைக்கு முதற்பரிசு பெற இந்த உலகத்தில் வேறு எந்த அரசாங்கத்தாலும் இன்று முடியவே முடியாது என்றும் சொல்லுவோம். அந்த சார் அரசாங்கத்தால் செய்யப்பட்ட அடக்கு முறைக் கொடுமைகளில் பலவற்றின் சின்னங்களை நேரிலேயே பார்த்திருக்கிறோம். பலரின் சரீரத்தில் உயிருடன் தோல் உரிக்கப்பட்டு, அத்தோல்களை நகங்களுடன் காட்சிசாலைகளில் வைக்கப்பட்டிருக்கின்றதையும்கண்கள் குத்தப்பட்ட சின்னங்களையும் பார்க்க நேரிட்டது.

எனவே இவைகளைவிட இனி எப்படி கொடுமைப்படுத்தி மக்களை அடக்கிவிடமுடியும் என்பது நமக்கு விளங்கவில்லை. அன்றியும் அப்படிப்பட்ட அடக்கு முறை நடத்திய அரசாட்சிகள் அடைந்த பலன்களையும் காதால் கேட்டுவிட்டோம்,கண்ணால் பார்த்தும் விட்டோம். அதனால் கொள்கை ஒழிந்துவிடவும் இல்லை, பிரசாரகர்கள் மறைந்துவிடவும இல்லை. அதற்கு பதிலாக முழு வேகத்துடன் வெற்றிபெற்று ஜெகஜ்ஜோதியாய் உலகக் கண்கள் கூசும்படி விளங்குகின்றதையே பார்க்கின்றோம். அதனால் தான் வரவேற்கின்றோம் என்று மறுபடியும் சொல்லுகின்றோம்.

———

ஏன் வரி குறைக்க வேண்டும்?

"விளை பொருள்களுக்கு விலை குறைந்து போனதால் வரிகளைக் குறைக்க வேண்டு"மென்றுமிராசுதாரர்கள் கூக்குரல் இடுகின்றார்கள். விலைகுறைந்த காரணத்தைக் கொண்டு வரியைக் குறைக்கும் படியான நிலைமை ஏற்பட்டு விட்டதா என்பதை வாசகர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். வரிவசூல் செய்வதானது விளை பொருள்களின் விலையை உத்தேசித்தா அல்லது "அரசாங்கம் நடைபெற வேண்டும்" என்கின்ற காரணத்துக்காகவா என்பதை முதலில் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அந்தப்படி யோசித்துப் பார்த்தால் அரசாங்கம் நடைபெறுவதற்காகத் தான் வரி வசூலிக்கப் படுகின்றது என்பது யாவருக்கும் விளங்கும். ஆகவே இது வரையில் பூமி மீதோ, வியாபாரத்தின் மீதோ, மற்றும் பலவற்றின் மீதோ போடப்பட்ட வரியெல்லாம் அரசாங்கம் நடை பெறுவதற்காகவே அரசாங்க செலவை உத்தேசித்து அதற்கு ஏற்றபடி வரி வசூல் செய்யப் பட்டு வருகின்றது.

ஆதலால் இப்போது வரியைக் குறைக்க வேண்டுமானால் அரசாங்கம் நடைபெறுவதற்குஎன்று ஏற்பாடு செய்திருக்கும செலவைக்குறைத்தாலொழிய வரியைக் குறைக்கமுடியாது. அப்படி இருந்தும் பல துறைகளில் அரசாங்க வருமானம் குறைந்து போய் விட்டதென்று கருதி அரசாங்கம் நடை பெற வேண்டிய செலவை குறைப்பது என்கின்றமுறையில் சில துறைகளில் செலவைக் குறைத்திருக்கிறது என்றாலும், அக்குறைவுகள் பெரிதும் கல்வி (மக்களுக்கு அவசியம் செய்து தீர வேண்டிய) இலாகாவிலேயே அதிகமாய் குறைக்கப் பட்டு விட்டது. மேலும் இரண்டொரு இலாக்காவில் வரியும் அதிகப் படுத்தியுமாய் விட்டது. அதாவது வருமானவரி ஸ்டாம்பு வரி, கோர்ட் செலவு விகிதவரி, தபால் கார்டு, கவர் முதலிய வரி மற்றும் பல வழிகளில் ஏழைகளையே பாதிக்கும் படியான துறைகளில் வரியை உயர்த்தி கொடுமை செய்தாய் விட்டது. ஆனால் வரிப் பணங்கள்ல் 100கு 75 பாகத்திற்கு மேல் மாதம் 1க்கு 100, 200, 500, 1000, 2000, 4000, 5000, 10000, 20000, ரூபாய்கள் வீதம் சம்பளமாக கொள்ளை அடிக்கும் உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தில் கைவைக்க அதைக் குறைக்க அரசாங்கமும் நடுங்குகின்றது. தலைவர்களும்,ஜனப்பிரதிநிதிகளும் நடுங்குகின்றார்கள். அதிக வரி! அதிகவரி!! பொறுக்க முடியாத-தாங்க முடியாத வரி!!! என்று கூப்பாடு போடுகின்ற மிராசுதாரர்களும் கூட சம்பளத்தைப் பற்றி பேச நடுங்குகின்றார்கள். அது ஒன்றும் குறைந்ததாகவும் தெரியவில்லை. இப்படி இருக்கையில் எதற்காக வரியை குறைப்பது என்பது தான் நமக்கு விளங்க வில்லை. இன்று நடக்கின்ற அரசாங்கம் உண்மையிலேயே பணக்காரர்களுக்கு-மிராசுதாரர்களுக்காகவே தான் நடை பெறுகின்றது. ஆனால் அரசாங்கம் நடைபெறவசூலிக்கப்படும் வரியில் பெரும்பகுதி ஏழைகளிடமேதான் வரிவசூலிக்கப்படுகின்றது. ஸ்டாம்பு, கள்ளு, சாராயம், கஞ்சா, அபினி, உப்பு, வெளிநாடுகளில் இருந்துவரும் சாமான்கள் மீதும், சில்லரை தொழிலாளிகள் மீதும்வியாபாரத்தின் மீதும், மற்றும் பலவழிகளிலும் வசூலிக்கப்படும் வரியெல்லாம் 100-க்கு99 பேர்களாய்இருக்கும் ஏழை மக்களையே பாதிக்கும்படியாய்இருக்கின்றது.மிராசுதாரர்கள் அதிகமான சொத்துக்களை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் வரியைக்குறைக்க ஏன் இவ்வளவு அவசரமும், ஆத்திரமும் படுகின்றார்கள். என்பது நமக்கு விளங்கவில்லை. இவர்களுக்கு எவ்வளவு வரி போட்டாலும் வரி கொடுத்தது போக இவர்களுக்கு சாப்பாட்டிற்கு இடம் இருந்தே தீரும். ஆனால் இவர்களது குடிக்கும், கூத்திக்கும், தர்பாருக்கும், மோட்டாருக்கும், கல்யாண கருமாதிகளில் பார்ப்பன பாகவதர்களுக்கு அழுவதற்கும் வேண்டுமானல் பணம் காசு குறையலாம். இதைப்பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும். இந்திய தொழிலை காப்பாற்ற என்ற சாக்கின்பேரில் அன்னியநாட்டு சாமான்கள்மீது போடப்படும் வரிகொடுமை! கொடுமை!!முக்காலும்கொடுமை!!! இந்திய கைத்தொழிலை காப்பாற்றுவதாக வைத்துக்கொண்டாலும் அதன் கொள்ளையெல்லாம் முதலாளிமார்கள்தான் 100-க்கு 10, 20, 30, 50, வீதம் லாபம் அடைகின்றார்களே தவிர ஏழைக்கூலிக்கும், தொழிலாளிக்கும் என்னலாபம்?

இன்னும் இதுபோன்ற பித்த

லாட்ட வரி எவ்வளவு வசூலிக்கப்படுகின்றது? ஆகவே வரி குறைப்பதைப்பற்றி யோசிப்பதனால் முதலில் பெரிய சம்பளங்களைக் குறைக்கவேண்டும். பிறகு ஏழைகளை கொடுமைப்படுத்தும் வரியைக் குறைக்கவேண்டும். கடைசியாக மிராசுதாரர்களின் விஷயத்தை கவனிக்கவேண்டும். இதுதான் யோக்கியமான —செங்கோல் அரசாங்கத்தின் முறை அப்படிக் கில்லையானால் கொடுங்கோல் அரசாங்கத்தின் முறை என்று தான் சொல்லுவோம்.

காலஞ்சென்ருர்.

பிரபல நாயடு குடும்பத்தைச் சேர்ந்தவரும், நாயடு சங்கத் தலைவரும், பென்ஷன் தாசில்தாருமான தோழர் ஐ. புருஷோத்தம நாயடு அவர்கள் 1—1—33ல் கோவையில் மாரடைப்பு வியாதியால் காலஞ்சென்று விட்ட செய்தி கேட்டு ஆற்ருெணுத்துயருருகின்ருேம். தோழர் நாயடு அவர்களுக்கு இறக்கும் தருவாயில் வயது எழுபதிகொன்ருகும். அவரது குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

வருந்துகிருேம்.

செங்கல்பட்டு ஜில்லா போர்டு பிரசிடெண்ட் தோழர் எம். கே. ரெட்டியாரின் தந்தையார் தோழர் வெங்கிட்டராஜலு செட்டியார் தமது 75-வது வயதில் காலமானதுகேட்டு வருந்துகிருேம். இவர் செங்கல்பட்டு ஜில்லாபோர்டு தலைவராய் இருந்துவந்திருக்கிருர்.

பெர்ஞட்ஷா
நான் ஒருபொதுவுடமை வாதியே.

பம்பாயில்வந்திறங்கியிருக்கும்அறிஞர்ஜார்ஜ்பெர்ஞட்ஷா அவர்களுக்கும் ஒருபத்திராதிபருக்கும் நடந்த சம்பாஷணை.

நான் ஒரு பொதுவுடமை வாதி Communist என்றுஷா மொழிந்தார் பின்னர் முசோலினியைப் பற்றி வாதித்தோம். அப்பொழுது நான் தாங்கள்பாசிஸ்ட் கொள்கையை ஒப்புக் கொள்கிறீர்களா? என்றுவினவினேன் அதற்கு அவர் முசோலினி அல்லது லெனினைப் போன்றவர்களின் அரசங்கமே இருக்க வேண்டுமென்று கூறினர். ஜனநாயகத்வ அரசாங்க மென்பதே எல்லாம் பித்தலாட்டமான மோசடியே யாகும். பாராளும் மன்றம் (சட்ட சபைகள் Parliment) என்பதுசிறிதும் பொறுப் பற்றதும், ஒழிந்தே தீரவேண்டுவது மாகும், அன்றியும் வெறும் வாய்போச்சு மேடையே யாகும். அதுஒருசர்வாதிகாரம் செலுத்தக் கூடிய ஒருதனி மனிதனின் பொறுப்பில் விட்டால் காரியங்கள் கிரமமாய் நடைபெற முடியும்.

கேள்வி—: தாங்கள் இங்கிலாந்தின் சர்வாதி காரியாக்கப்பட்டால் முதலில் என்ன செய்வீர்கள.

பதில்—: என்னை சர்வாதி காரியாய்ச செய்யுங்கள். பிறகு மற்றவைகளைப் பார்க்கலாம்.

ஈரோடு
முனிசிப்பாலிடி.

ஈரோடு முனிசிபாலிடியின் 1932 வருஷத்திய நிர்வாகத்தைப்பற்றி சென் அரசாங்கத்தார் எழுதியிருக்கும் மதிப்புரை.

"ஈரோடு முனிசிபல் நிர்வாகம் மிகவும் திருப்திகரமாயிருக்கின்றது. கவுன்சிலர்களுக்கும் சேர்மெனுக்கும் இருக்கும் ஒற்றுமையும் அன்னியோன்னிய பாவமும் மிகவும் மகிழ்ச்சியடைய தக்கதேயாகும். இவ்வித ஒற்றுமையான தூஈரோடு முனிசிபாலிடியின் நிர்வாகத்தை மேன்மைப்படுத்துவதுடன் ஜனங்களுக்கு நிலையான, முற்போக்கான காரியங்களைச் செய்தேதீரும்.

ஸ்தலஸ்தாபன இலாக்கா
மந்திரி உத்திரவுப்படி,
E. Conransmith,
அரசாங்கக்காரியதரிசி.

பகுத்தறிவு
நூற்பதிப்புக்
கழகம் திறப்புவிழா.

சென்ற 20—1—33 தேதி பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட் திறப்புவிழா மண்டி, தோழர் எஸ். ராமசாமி நாயக்கரவர்கள் மண்டியின் பின்புறமுள்ள கொட்டகையில் தோழர் வி. வி. சி. ஆர். முருகேச முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் பகுத்தறிவு என்பது பற்றித் தோழர்கள் டி. எம். நரசிம்மாச்சாரி அவர்கள் பி. ஏ. பி. எல். எஸ். மீனாட்சிசுந்தரம் அவர்கள்பி. ஏ. எல். டி., கேசவலால்ஈ.வெ.ராமசாமி ஆகியவர்கள் பேசினர்கள். தலைவர் முடிவுரையுடனும், ஷை கழகத்தின் காரியதரிசி தோழர் அ. இராகவன் அவர்களின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது. பகுத்தறிவு புஸ்தகங்கள் விளியோகிக்கப் பட்டன.

காண்சாகிப்
சேக்தாவுத் அவர்கட்குப் பாராட்டு.

ஈ. வெ. ராமசாமி சொற்பொழிவு.

ஈரோடு முனிசிபல் சேர்மன் தோழர் கே. ஏ. ஷேக் தாவுது சாயபு அவர்கட்குகான் சாயபு பட்டம் கிடைத்ததைப் பாராட்டுவதற்காக ஈரோடு முனிசிபல் ஆபீஸ் அதிகாரிகளால் ஒரு தேநீர் விருந்து பாராட்டுக்கூட்டம் 15—1—33-ந் தேதி மாலை 5-மணிக்கு ஈரோடு முனிசிபல் ஆபீஸ் காம்பவுண்டில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் தோழர். ஈ வெ. ராமசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு உள்ளூர் பிரபலஸ்தர்களும், உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், முஸ்லீம்களும் முனிசிபல் கௌன்சிலர்களுமாக ஏராளமாக சுமார் 500 ஜனங்கள் வரை கூடியிருந்தனர். அனைவரும் சிற்றுண்டி அருந்தினர். பின் கூட்டம் நடைபெறும் கொட்டகைக்கு யாவரும் வந்தமர்ந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் வருமாறு.

தோழர்கள் ஈ. வெ. கிருஷ்ணசாமி, ஈ. ஒ. சி. முத்துக்கவுண்டர், சுல்தான் சாயபு, ஈ. எஸ். கோவிந்தசாமி நாயுடு, கே. குதரத்துல்லா சாகிப், சின்னசாமிக்கவுண்டர், ரங்கராஜு செட்டியார, ராகவேந்திரராவ், முத்துக்கருப்பஞ் செட்டியார் டேவிட் முதலிய கௌன்சிலர்களும், தம்புராஜ் பிள்ளை, இம்பீரியல் பேங் காஷியர், இம்பீரியல் பேங் ஏஜண்ட், ஜில்லா முன்சீப், சர்கிள் இன்ஸ்பெக்டர், எக்சைஸ் இன்ஸ்பெக்டர், இன்கம்டாக்ஸ் ஆபீசர் டிப்டிசூப்ரண்டெண்ட்முதலியஅதிகாரிகளும், கோபால், அற்புதசாமி, ஒ. எம். ரங்கசாமிக்கவுண்டர், டி. எம். நரசிம்மாச்சாரி சி. ரங்கசாமிக் கவுண்டர், யு. எஸ். சுப்பிரமணிய அய்யர், இ. எஸ். கணபதி அய்யர், வெங்கட்டப்ப செட்டியார், முதலிய அனேக வக்கீல்களும், சதாசிவம் செட்டியார், முருகநாதம் பிள்ளை ரிடையர்டு அதிகாரிகள் மற்றும் சா. ராமசாமி நாய்க்கர் முதலிய சுமார் 100 வியாபாரிகளுமாவார்கள்.

பின் முனிசிபாலிட்டி காரியதரிசி தோழர் ராமசாமி முதலியார் அவர்கள் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களை தலைமை வகிக்குமாறு கேட்டுக் கொண்டார் தோழர் ராமசாமி கரகோஷத்தினிடையே ஆசனத் தமர்ந்தார்.

முனிசிபல் பெண் பாடசாலை மாணவிகளால் தோழர் கெ. எ. சேக்தாவுத்சாயபு அவர்கட்குகான் சாயபு சட்டம் கிடைத்ததைப் பாராட்டிப் பாட்டுப்பாடினர்கள். முனிசிபல் சிப்பந்திகளின் சார்பாக தோழர் காரியதரிசி கெ. ராமசாமிமுதலியாரும் ஆரம்ப ஆசிரியர்களின் சார்பாக தோழர் சாவும் தோழர் சேக்தாவுக் அவர்கட்கு வரவேற்புபத்திரங்கள் வாசித்துக்கொடுத்தார்கள் அதற்கு அவர் பதிலளித்ததாவது:-

தோழர் ஷேக்தாவுத் அவர்கள் பேசியதின் சுருக்கம்:—

தலைவரவர்களே! கனவான்களே!
முனிசிபல் சிப்பந்திகளே!
உபாத்தியாயர்களே!!

தாங்கள் செய்த மரியாதைககும் உபசாரப் பத்திரத்திற்கும் நன்றி செலுத்துகின்றேன்.

ஆனல் நான் இப் புகழ்ச்சிகளுக்கு தகுந்தவனல்ல. முனிசிபல் நிர்வாகம் ஜனங்களுக்கும், சர்க்காருக்கும் திருப்தி தரும்படி நடந்திருந்தால் அதற்கு முக்கியகாரணம் என்னுடன் கூட இருந்து எனக்கு யோசனை சொல்லியும் உதவி புரிந்தும் நடத்தின் எனது அன்புள்ள சகாக்களான கவுன்சிலர்களே முக்கிய காரணமாவார்கள். அதோடுகூட மிகவும் அக்கரையுடனும் அன்புடனும் வேலைசெய்த முனிசிபல் சிப்பந்திகளும் ஆவார்கள்.

எல்லாவற்றையும்விட இந்தமாதிரியான பொது வாழ்வில்எனது சிறிய வயதிலேயே என்னை இழுத்துவிட்ட எனது தலைவரான ராமசாமிப் பெரியாரேயாவார். அவரைப் பின்பற்றியேகாரியங்கள் செய்துவருகின்றேன். மற்றும் எனது நிர்வாகத்தில் எவ்வித குறை இருந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் முனிசிபாலிட்டியுடன் ஒத்துழைத்துவரும் இந்த ஊர் மகாஜனங்களுடைய அன்பும் ஒத்துழைப்பும் இல்லாமலிருந்தால் இந்த முனிசிபாலிட்டி ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் இவ்வளவு பெருமையும் ஏற்பட்டிருக்க நியாயமில்லை. ஆகையால் இன்று எனக்கு அளித்திருக்கும் இந்தப் பட்டம் உங்கள் எல்லாராலும் ஏற்பட்டதே ஒழிய எனது முயற்சியினல் அல்ல என்று மனப் பூர்வமாய் சொல்லுகிறேன் என்று பேசினர்.

பின் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் எழுந்து முடிவுரையாகப் பேசியதாவது:—

தோழர்களே! இன்றுதோழர் சேக்

தாவுத் அவர்கட்கு கான்சாயபு பட்டம் கிடைத்ததைப் பாராட்டுவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு என்னைத் தலைமைவகிக்கக் கேட்டுக் கொண்டதற்கு நன்றிசெலுத்துகிறேன்.

இம்மாதிரியான பட்டங்களை சுமார் 15, 20வருஷங்களுக்கு முன்பு கருதியதைப்போல்இதுசமயம் மக்கள் அவ்வளவு மேன்மையாகக் கருதுவதில்லை.

உதாரணமாக இரண்டொரு வருஷங்களுக்கு முன் ஒரு நண்பருக்கு கிடைத்த ஒரு பட்டத்திற்கு பெருத்த பாராட்டுதல்கள் நடக்கும்போது நான் அவரைப் பார்த்து "பட்ட சம்பந்தமான பாராட்டுவிழா தொந்திரவு உங்களுக்கு இனி கொஞ்சநாளைக்கு இருக்கும். உங்கள் மனமும் சந்தோஷத்தில் ஆழ்ந்திருக்கும்" என்று சொன்னேன். பட்டங்களால் பிரமாதமான பலன் இல்லாவிட்டாலும் இந்த சந்தோஷத்திற்காவது இடமிருக்கிறதே" என்று சொன்னேன். அதற்கு அவர் அப்படிக்கூட இதில் ஒன்றும் பெருமைப்பட இடமில்லை. என்றார். உடனே நான் என் அப்படிச் சொல்லுகிறீர்கள் என்றுகேட்டேன். அதற்கு அவர் இதோ இவ்வருஷம் பட்டம் வழங்கி இருக்கும் லிஸ்ட்டைப் பாருங்கள். எனக்கும் பட்டம்கிடைத்திருக்கிறது. இன்னொருவருக்கும் பட்டம் கிடைத்திருக்கிறது. அவரைப்பற்றியோ, தங்களுக்கும், உலகத்திற்கும் நன்றாய்த்தெரியும்,சர்க்காருக்கும்நன்றாய்தெரிந்திருக்கலாம். ஆகவே நான் பட்டம் கிடைத்ததே என்று பெருமைப்படவா? அல்லது என்னையும், அவரையும் ஒரே லிஸ்டில் சேர்த்திருக்கிறார்களேஎன்று அவமானப்படவா என்று சொன்னார். அந்தச் சமயம் எனக்கு மிகவும் பரிதாபமாகவே இருந்தது. இதற்காகப் பாராட்டுவதா? அனுதாபப்படுவதா என்பது எனக்கே புரியவில்லை. இம்மாதிரியாகவேதான் பெரும்பான்மையான பட்டங்கள் பயன்பெறுகின்றன, ஆகவே பட்டங்களுக்கு யோக்கியதையையும்,செல்வாக்கையும்உண்டாக்கவேண்டும் என்கின்ற உத்தேசத்தில் ஒன்று இரண்டு தகுந்த நபர்களுக்கு அளிக்கப்படுகிறது என்றுதான் நான் கருதுகிறேன். உண்மையிலேயே கான்சாயபு பட்டமானது தோழர் ஷேக்தாவுத்துக்கு வந்து சேர்ந்ததால் இவருக்கு ஏதாவது அதிக பெருமை ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆனால் அந்தப் பட்டம் இவரைவந்து அடைந்து (அடைக்கலம் புகுந்து பெருமை அடைந்து என்றுதான் சொல்லவேண்டும்.

இனி வருங்காலத்தில் பட்டங்கள் லட்சியமற்றதாக ஆகிவிடும்.

இப்பொழுதே பார்க்கலாம். பட்டம் பெற்றவர்களைவிட ஜெயிலுக்கு போனவர்கள் ஜனங்களுக்காக பாடுபடுகின்றவர்கள் என்றுகருதியேஅதிகமாகமதிக்கச் செய்கின்றார்கள் என்பதாகும்.

உண்மையில் பார்த்தாலும்ஏழைஜனங்களுக்காகப் பாடுபடுகின்றவர்கள் தங்கள் பட்டத்துக்கு உரியவர்கள் என்று சர்க்கார் பெரிதும்கருதுவதில்லை என்பதை யாரும் அறியலாம்.

இதற்குக் காரணம்எப்படிஇருந்தாலும் ஏழைஜனங்களுக்கும்,சர்க்காருக்கும் நல்ல பிள்ளையாய் இருக்க சிலபத்தில் இனி முடியாது. ஜனங்களுக்கு அறிவும், அனுபவமும் ஏற ஏற அனேக விஷயங்கள் தலைகீழ் புரட்சியை அடைவது இயல்பேயாகும். ஆகவே அதற்குத் தகுந்தபடி திருத்துப்பாடடையவேண்டியது அவ்வுடமையாகும். இன்று இந்த ஊரில் பட்டம் உடையவர் தோழர் ஷேக்தாவுத் அவர்களேயாகும்.

இதற்குமுன் யாராவது இருந்தார்களா என்றால் அதுவும் இவருடைய தகப்பனாரேயாகும். இவரது தகப்பனார் தோழர் கே. அலாவுதீன் சாயபு அவர்கள் கான்பஹதூர் பட்டம் வழங்கப்பட்டவர். ஆனால் அது இவருக்குக்கூட-இந்த ஊரில் அனேகருக்கு கூட தெரியாது. ஏனெனில் அந்தக் காலத்திலேயே அதை அவர் அவ்வளவு பிரமாதப்படுத்திக் கொள்ளவில்லை. தோழர் கே. அலாவுதீன் சாயபு அவர்கள் இந்த ஊர் பொது நடவடிக்கை விஷயத்தில் அக்கால மாதிரிக்கேற்றபடி எல்லாப் பொறுப்புகளையும் வகித்து வந்தவர். இவரைப் போலவே மிகவும் அடக்கமானவர். கூட்டங்களில் பேசவேமாட்டார். அதுபோலவே இவரும் எல்லாப் பொறுப்புகளையும் வகித்து இருக்கின்றார். ஆனால் பேசுவதில்லை பேசவேண்டி ஏற்பட்டு விடுமோ என்று அவர் அனேக கூட்டங்களுக்கு போவதில்லை. போனாலும் பின்னால் ஒளிந்துகொள்வார். ஆனால் இன்று அவர் பேசியதில் எவ்வளவு கருத்துக்கள் இருந்தது என்பதை பாருங்கள். என் விஷயத்தைப்பற்றி பேசிய பல விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்கள் எல்லாம் அறிவும், கருத்தும் நிறைந்தவைகளாகும். இதுவரை வேறு யாருடைய நிர்வாகத்திலும், ஈரோடு முனிசிபாலிட்டியானது இவ்வளவு ஒற்றுமையாய் கலகமில்லாமல் நிர்வாகத்திற்கு எவ்வித குந்தகமும் இல்லாமல் நடைபெற்றுவந்ததாகக் கண்டுபிடிப்பது கஷ்டமான காரியமாகும். ஊர் ஒற்றுமைக்கும், ஊர் ஜனங்களுக்கு முனிசிபாலிட்டியிடம் இருக்கும் மதிப்புக்கும் ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன்.

இந்த முனிசிபாலிட்டியில் இந்த ஊருக்கு மின்சார விளக்குத் திட்டம் ஒன்றுஏற்பாடுசெய்து அதைச் சொந்தத்தில் வைத்து நடத்துவதற்குப் பணங்களும் ஏற்பாடுசெய்து காரியங்கள் துவக்கப்படும்போது சர்க்காரார் தங்களுக்கு உள்ள அதிகாரத்தை தப்புவழியில் செலுத்தி அதற்கு உரிய அனுமதியை ஒரு வெள்ளைக்கார முதலாளி கம்பெனிக்கு அளித்துவிட்டார்கள்.

நமது மந்திரிகள் ஈரோடு முனிசிபாலிட்டி நன்மையைவிடத் தங்கள் உத்தியோகம் நிலைக்கவேண்டிய நன்மையையே அதிகமாய் கவனித்து ஆட்டுக் குட்டிக்கும் புலிக்குமுள்ள கதைபோல் "நீ செய்திருக்காவிட்டாலும் உன் தகப்பன் செய்திருப்பான்" என்று சொல்லி அதாவது உமக்கு முன் இருந்தவர்கள் நடத்திய நிருவாகத்தால் இந்த முனிசிபாலிட்டி லைசென்ஸ் பேறத் தகுதி அற்றது என்றுசொல்லிவிட்டார்கள் இதைப்பற்றி நான் குற்றம் சொல்ல முடியாது. ஏனென்றால் மனிதர்களின் சராசரி யோக்யதைக்கு இது குறைந்ததல்ல. ஆதலால் அப்போதைய மந்திரிகள் தங்களைக்காப்பாற்றிக்கொள்வதைப் பிரதானமாய் கருதியதை குற்றமாகக்கருதவில்லை. ஆனால் அதை ஈரோடு ஜனங்கள் தங்களை அலட்சியமாய் கருதியதாய் கருதி இப்போது முன் குறிப்பிட்ட மின்சாரதிட்டம் வெள்ளைக்கார கம்பெனியாரால் நிறைவேற்றி அமுலுக்கு கொண்டுவந்து ஒரு வருஷமாகியும் அதை நிவர்த்தில்லாத இரண்டொருவர் தவிர மற்றும் யாரும் அதை உபயோகப்படுத்திக் கொள்ளாமல் இருக்கிறார்கள் இது பாராட்டக்கூடியதேயாகும். இனியும், இதுபோலவே ஒற்றுமையாயும்பொறுப்பாயும் பொதுஜனங்களுடைய நன்மைக்கும், முற்போக்குக்குமான காரியங்கள் நடைபெறவேண்டுமென்றே விரும்புகிறேன். என பேசியபின்பு முனிசிபல் காரியதரிசி வந்தனம் கூறி கூட்டம் முடிவுபெற்றது.

தோழர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் உடல்நிலை.

சிவகங்கை தோழர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள். பி. ஏ. பி. எல். உடல் நலிவுகாரணமாக திருபத்தூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்; அவர் ஆரம்பத்தில கவலைக்கிடமான நிலையிலிருந்ததாகவும் சொன்னார்கள். 16-1-33 திங்கட்கிழமை மாலை 4மணிக்கு தோழர்கள். ராம-சுப்பையா,சு. ப. விசாலாட்சி, வி. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம். எஸ். நடராஜன் அழகப்பன், முதலியவர்கள் சென்றுபார்வையிட்டு பேசி வந்தார்கள். தோழர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் மிகவும் மெலிந்து போயிருக்கிறார். விரைவில் குணமடைந்து விடும் என்று டாக்டர் சொல்லியதாகச் சொன்னார்.

மற்றும் அவர் சொல்லியதாவது:- "சுயமரியாதை இயக்கப் பிரசாரத்தை நாடு முற்றும் பரப்புங்கள் ஏழைமக்கட்கும், கஷ்டப் படுகின்றவர்கட்கும் நமது இயக்கத்தைப் பற்றிநன்கு எடுத்துக் கூறுங்கள். நமது இயக்கத்தால் தான் அவர்கள் பயன் அடைய முடியும் நானும் பிழைத்துக் கொண்டேன் விரைவில் உங்களுடன் கூடி நானும் பிரசாரம் செய்ய வருகிறேன்" என்று மிக்க ஆர்வத்தோடு சொல்லியனுப்பினார்.

மீரத் எதிரிகளுக்குப் பாராட்டு.

ஈரோட்டில் கூட்டம்.

சென்ற 19—1—33ந்தேதி மாலை 5-மணிக்கு ஈரோடு வாய்க்கால் கரையில் தோழர் அ. இரத்தினசபாபதி அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடி மீரத் சதிவழக்கில் தண்டிக்கப்பட்ட பொதுவுடமைத் தோழர்களைப்பாராட்டுவதற்கும், டாக்டர் சுப்பராயனவர்களின் மசோதாவிற்கு வைசிராய் பிரபு அனுமதியளிக்க வேண்டுமென்று வற்புறுத்துருத்தியும், சீர்திருத்தக் கலப்பு மணம் செய்து கொண்ட மணமக்கள் தோழர்கள் நல்லமுத்தம்மாள்—டி. வி. ராமமூர்த்தி சாஸ்திரி ஆகிய இருவரையும் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

ஈரோடு.

சுயமரியாதை வாலிபர் சங்கக்கூட்டம்.

சென்ற 11-1-33ந்தேதி ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கத்தைப் புதுப்பித்து நிர்வாக ஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், சென்ற டிசம்பர் 28, 29ந்தேதிகளில் நடைபெற்ற வேலைத்திட்டக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களை ஒப்புக்கொள்வதற்குமாகஒரு பொதுக் கூட்டம்மகாஜனஹைஸ்கூல் சரஸ்வதிஹாலில் நடை பெற்றது. அதற்கு வியாபாரிகளும், உபாத்தியாயர்களும் மற்றும்பொது ஜனங்களும் ஏராளமாய் வந்திருந்தார்கள். முதலில் பவானியிலிருந்து வந்த 6 வயதுசிறுவன் கிருஷ்ணசாமியால் சுயமரியாதைப் பாட்டுகள் பாடப்பட்டது.

அக்கூட்டத்திற்கு தோழர் ஆர். அன்னபூரணி அவர்கள் தலைமை வகிக்க வேண்டுமென்று தோழர் டி. டி. கோபால் அவர்கள் பிரேரேபிக்க தோழர் நாகலிங்கம் அவர்கள் ஆமோதிக்க பலத்தகரகோஷத்தினிடையே தோழர் ஆர் அன்னபூரணி அவர்கள் தலைமை வகித்து "சுயமரியாதை இயக்கம்" செய்த வேலைகளைப்பற்றியும், அதன் கொள்கைகளைப்பற்றியும் விரிவாகப்பேசினார்.

பின் தோழர்கள் ரத்தினசபாபதி, அ. ராகவன், ஆகிய இருவரும் இயக்கக்கொள்கைகளைப்பற்றியும், அதன் எதிர்ப்புகளைப் பற்றியும், மக்கள் மனதில் பதியுமாறு பேசினார்கள். பின் தோழர் ஈ. வி ராமசாமிஅவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் புதிய வேலைத்திட்டங்களைப் படித்துக்காண்பித்து அதை விளக்கமாக மக்களறியும் வண்ணம் விரிவாகப்பேசினார். பின் தலைவர் முடிவுரை கூறியபின் தோழர் நாகலிங்கம் அவர்கள் வந்தனோபசாரம் கூறியபின் கூட்டம் கலைந்தது ஒரு நிருபர்.

செட்டி நாட்டில் சுயமரியாதைப் பிரசாரம்.

தோழர்கள் பொன்னம்பலனார், ஜீவானந்தம் சொற்பொழிவு.

காரைக்குடி.

சென்ற 13-1-33வெள்ளிக்கிழமை இவ்வூர் உண்மை நாடுவோர் சங்கத்திற்கு நிர்வாக ஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தோழர் ராமசுப்பையா விசாலாட்சி அவர்களில்லத்தில் தோழர். ப. ஜீவானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர். அ. பொன்னம்பலனார் அவர்கள் இச்சங்கம் இதுவரை செய்துள்ள வேலைகளைப்பற்றியும், இனி செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றியும் மிக உருக்கமாகப்பேசினார்.

பின் தலைவர் சமதர்ம இயக்கத்தின் லக்ஷ்யங்களைப்பற்றியும், வாலிபர்களின் கடமைகளைப்பற்றியும் பேசியபின் புரட்சியில் விடுதலைபெற்ற தேசங்களைப்பற்றியும் மிகவும் உருக்கமாகப்பேசினார். நிர்வாக ஸ்தர்களைத்தேர்ந்தெடுத்த பின்கூட்டம் கலைந்தது.

தேவ கோட்டை.

சென்ற 14-1-33ல் தேவ கோட்டை பந்தடி மைதனத்தில் காரைக்குடி "உண்மை நாடுவோர்" சங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ப. ஜீவானந்தமவர்களைக் கூட்டத்திற்குத்தலைமை வகிக்குமாறு தோழர் பொன்னம்பலனாரவர்கள் கேட்டுக்கொண்டார். தோழர் ஜீவானந்தமவர்கள் தலைமை வகித்து. தீண்டாதார் துயரம், வைதீகர்களின் அட்டூழியம், மதக்கொடுமைகள், மக்களின் அறியாமை முதலிய விஷயங்களைப்பற்றியும், பொதுவுடமையைப்பற்றியும் மிகவிளக்கமாகப்பேசினார். பின் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் நமது "அடிமை இந்தியா" "சமதர்ம" இந்தியாவாக்கஎப்படி முடியுமென்பதைப்பற்றியும், எழைகள், தொழிலாளர்கள், உழைப்பாளர்கள் வறுமை என்று நீங்குமென்பதைப் பற்றியும், சங்கராச்சாரியாரின் கொள்ளையைப்பற்றியும்மிகஉருக்கமாகப் பேசினார். பின் ஒருபிராமணநண்பர் ஒரு ஜாதியாரை தூற்றவேண்டாமென்று கூறினார். அதற்குத் தலைவர் பதில் அளித்துவிட்டு மீண்டும், தோழர் பொன்னம்பலனாரைப் பேசுமாறு கூறினார். அவர்மீண்டும் மிகத் தெளிவாக பாமர மக்கள் மனதில் பதியுமாறு சொற்பொழிவு நிகழ்த்தினார் தலைவர் முடிவுரையில் எது துவேஷமென்பது பற்றி பேசியபின் நன்றி கூட்டம் கலைந்தது.

கோட்டையூர் சமதர்ம சங்கம்.

18.1-33ந்தேதி ஷை சங்கத்தின் நிர்வாக ஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு தோழர் ப.ஜீவானந்தம் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம்நடைபெற்றது. பின் பலரை நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பொதுக்கூட்டம்,

17-1-33ல் கோட்டையூரில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பொன்னம்பலனார், ப. ஜீவானந்தம் ஆகியவர்கள் "சமதர்மம்" என்பது பற்றி பேசினார்கள்.

(திருப்பத்தூர், சிராவயல், திருமயம் முதலிய ஊர்களின் விபரம் அடுத்த வாரம் வெளிவரும்.

மாயவரம் சுயமரியாதைச்சங்கம்.

ஷை சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள் கூட்டம் 12—1—33 மாலை 5-மணிக்குசங்கக்காரியாலயத்தில் கூடியது சுயமரியாதை அபிமானிகளான தோழர்கள் கே. லட்சுமிகாந்தம் பி. எ., பி. எல்., ஏ. பாப்புசாமி, என். பி. காளியப்பன், கோவிந்தராஜன் முதலியவர்களும் சங்க அங்கத்தினர்களும் விஜயம் செய்திருந்தனர். தோழர் சின்னையா அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

தீர்மானங்கள்.

1. 1933-வருஷத்திற்கு அடியிற்கண்ட தோழர்களை நிர்வாகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டது. எம். கல்யாண சுந்தரம் (தலைவர்) எஸ். சம்பந்தம் (உப தலைவர்) டி. சின்னையா, எஸ். ரத்தினம், (கூட்டுக் காரியதரிசிகள்) சி. நடராஜன் (பொருளாளர்), சித்தக்காடு கே. ராமையா ஆர். சௌரிராஜன், டி- எஸ். நாயர், இராமாமிர்தத்தம்மாள், வி. கோபாலன், சி. நாராயணசாமி (நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள்.)

2. சென்ற டிசம்பர் மாதம் 28, 29-தேதிகளில் ஈரோட்டில் கூடிய சுயமரியாதைத்தோழர்களால் தீர்மானிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை முழுமனதுடன் எற்றுக்கொள்ளப்பட்டது.

3. ஐரோப்பா சுற்றுப்பிரயாணத்தை முடித்துவிட்டு இந்தியாவுக்கு நாளது ஜனவரி மாதம் 25-ந்தேதி இவ்விடம்வரும் தோழர்எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல்., அவர்களை தலைவராகக்கொண்டு இச்சங்கத்தின் 5-ம் வருடப்பூர்த்தி விழாவை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

3. (a) சங்க ஆண்டு விழாவை நடத்தவும், அதற்காவன செய்யவும் தோழர் சி.நடராஜன் அவர்களை நியமிக்கப்பட்டது.

4. சமீபத்தில் கும்பகோணத்தில் நடைபெறப்போகும் மகாமகத்திற்கு பொதுஜனங்கள் மதவெறியினாலும், அறியாமையினாலும் கூடக்கூடுமானதால் அதைதடுக்கவும், மக்கள் இம்மதபுரட்டை உணரவும் இச்சங்கம் கும்பகோணம் சுயமரியாதை வாலிபச்சங்கத்தாரோடு சேர்ந்து சகல முயற்சிகளும், எடுத்துக்கொள்ள வேண்டுமாயும் தீர்மானிக்கப்பட்டது என காரியதரிசி தோழர் சின்னையா அவர்கள் அறிவிக்கின்றார்.

ஈரோடு தானியேல் தாவீது ஞாபகார்த்த வாலிபால் விளையாட்டு.

1933ஸ்ரீ பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் வாலிபால் (Volley Ball sixes) போட்டி பந்தய விளையாட்டு ஒன்று லண்டன்மிஷன் மைதானத்தில்நடைபெறும். இதற்கு நமது மாகாண முழுவதிலுமுள்ளவர்கள் விளையாடுவதில் பங்கெடுத்துக்கொள்ளலாம். டீம் ஒன்றுக்கு 2 ரூ. பிரவேசக் கட்டணம் அனுப்பவேண்டும். 28-1-33உக்குள் பணமும், விண்ணப்பமும் அனுப்பவேண்டும். குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு அனுப்பப்படும் விண்ணப்பங்களும், பணமில்லாமல் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் அவசியம் கவனிக்கப்படமாட்டா. போட்டியில் கடைசிவரையிலும் நின்று ஆடிவெற்றி பெற்றவர்களுக்கு மையத்தில் தங்கம் பூசிய 6 அழகிய வெள்ளிப் பதக்கங்கள் பரிசாக வழங்கப்படுவதுமல்லாமல், ஒரு பெரிய நேர்த்தியான ரோலிங் கப் (Rolling Cup) வெள்ளிக் கிண்ணமும் கொடுக்கப்படும். நிரந்தரப் பெயர்கொண்ட ஒரு டீமோ அல்லது ஒரு சங்கமோ தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்கு வெற்றியடைந்தால் அதை வெற்றிபெறச்செய்யக்கூடிய சங்கத்திற்கோ அல்லது கட்சிக்கோ அந்த அழகியவெள்ளிக் கிண்ணத்தை சொந்தமாக்கிக் கொள்ள உரிமையுண்டு. பந்தயத்தில் விளையாடுவதற்கு, பன்னிரண்டு டீமுக்கு மேல் கலந்து கொண்டால் கடைசி வரையில் நின்று ஆடி தோற்றுப் போகிறவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்கள் பரிசாக அளிக்கப்படும். இது சம்பந்தமாக விஷயம் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

E. S. Arumugam,
Tournament Secretary,
L. M. School, Erode.

[8ம் பக்கத்தொடர்ச்சி]

இருக்கிறது. (குறைந்த அளவு) பாடுபட்டதாகவாவது காட்டிக்கொள்ளவேண்டி இருக்கிறது. சிலர் இருவரிடமும் யோக்கியர் போல்-வெகு அக்கரைக்காரர்கள் போல் நடந்துகொள்ளவோ அல்லது குறைந்த அளவு கோள் சொல்லியாவது நம்பிக்கைபாத்திரர்களாய் நடக்துகொண்டதாகக் காட்டிக்கொள்ளவாவது வேண்டியதாய் இருக்கின்றது. ஆகவே மதலஸ்தாபன இலாக்கா புதிய ஸ்தாபிரியாகியதோழர். பொப்பிலி ராஜா சாயபாவது இதைக்கவனித்து தனது காலத்தில் இதே காரியத்தை சாதித்துவிட்டுப்போனால் நாட்டுக்கு ஒரு வழியாவது நன்மை செய்தவர் என்று சொல்லிக்கொள்ள அருகதை உடையவராவார். டாக்டர்சுப்பராயன்அவர்கள் ஸ்தலஸ்தாபன இலாக்காவிலும், மற்றும் சிலதிலும் செய்த பல நன்மைகள் அவர் இன்னமும் எந்தக்கட்சியில் சேர்ந்து மக்களை எவ்வளவு ஏமாற்றினாலும், மறக்கக்கூடியதல்ல. அதுபோலவே தோழர் முத்தையா முதலியார் அவர்களும் உத்தியோக வினியோக விஷயத்தில் செய்த காரியம் என்றும் தக்கள் மறுக்கக்கூடியதல்ல அதுபோல் ஏதாவது ஒரு காரியம் பொப்பிலி ராஜாவும் செய்தால் நன்மையாய் இருக்கும்.

'நீ மயங்குவதேன்'?

இதுவரையில் தமிழில் வெளியிடப்படாத நூல். தமிழ்வாலிபர்கள் பலவித நொண்டிக்காரணங்களைச்சொல்லி, சோம்பித்திரிந்து, தனக்கும், தன் இனத்தவருக்கும் பலனில்லாதிருப்பதைத் தடுத்துப் பிறநாட்டு வாலிபர்களைப்போல் திடபுத்திகொண்டு முன்னேறும் முறைகளைச்சொல்லும் நூல். 1. வயதாகவில்லையா? 2. வயதாகிவிட்டதா? 3. பொருளில்லையானலென்? 4. ஊக்கமுடையோன் ஆக்கமுடையான், 5. உண்மை நீங்கத்திண்மை நீங்கும், 6. நில் ஓடாதே, 7. கற்றுக்கொள்—செய்—செய்துபார் 8. இன்றும் இன்னே செய், 9. கெடுவான் கேடு நினைப்பான், 10. அதிர்ஷ்டம் போன்ற விஷயங்கள் நேரில் பேசுவதுபோல் திடமான பாஷையில், சுலபமான நடையில் எழுதப்பெற்றுள்ளது.

ஆசிரியர்:- கோ. நடேசய்யர் விலை ரு. 1.

கிடைக்குமிடம்:- சகோதரி பிரஸ், ஹட்டன் (சிலோன்)

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

லும் சரி, ஓடும் நடத்தையாய் இருந்தாலும் சரி, சிரிக்கும் நடத்தையாய் இருந்தாலும்சரி, இந்த நடத்தைகளெல்லாம் உடலுடன் பிறந்தவை. அதுபோலவே நன்மைக்குறிய நடத்தையையும், தீமைக்குறிய நடத்தையையும், அன்புக்குறிய நடத்தையும், ஈகைக்குறிய நடத்தையும், குரோதத்திற்குறிய நடத்தையும், லோபத்துக்குறிய நடத்தையும், நமது தேகத்துடன் பிறந்தவை. இவ்வித நடத்தைகளை "கடவுள்" சிருஷ்டித்தார் என்றாலும், அல்லது அமைத்தார் என்றாலும், என்ன நமக்கு விளங்கின மாதிரி? சிசு, பிறந்ததும் சிலநடத்தைகளை காட்டுகிறது. அழுகை, தும்பல், மலஜலம் கழித்தல், இத்தியாதி நடத்தைகளை காட்டுகின்றது. இவ்வித நடத்தைகளை "கடவுள் சிருஷ்டி" செய்தார் என்றால் ஆபாசத்திற்கு இடம்தரும். அதுபோலவே வேறு சில வார்த்தைகளை வளர்ந்தபிறகு நாம் காட்டினால் அவ்வேறு சில நடத்தைகளை சிருஷ்டி எனல் ஆபாசமன்றோ? ஆதலின் நன்மையும், தின்மையும், அன்பையும், ஈகையும் கடவுள் மனிதருக்குள் அமைத்தார் என்பதும் ஆபாசமே.

மேலும் நமது அன்பும், ஈகையும், மனிதவர்க்கத்திற்கே உறியதென்று சொல்வது கூடாது. ஏனெனில் பெரும்பான்மை சீவராசிகளனைத்தும் அன்புக்குறிய நடத்தைகளையும், ஈகைக்குறிய நடத்தைகளையும், காட்டுகின்றன. குருட்டு கிழமான கூழக்கிடாவை (ஓர்வித பட்சியாகிய Pelican) ஏனையகூழைக்கடா உணவளித்து ரட்சித்து வந்ததாம். நமது தாய் பால் கொடுத்து வளர்ப்பதைப்போல் மற்ற நாற்கால் மிருகங்களும் தங்கள் குட்டிகளுக்கு பால் கொடுத்து வளர்த்து வருகின்றன. நாம் செய்துவரும் அன்புக்குறிய நடத்தைகள் பலவும் மற்ற சீவன்களும் காட்டுகின்றன. அன்பை மனிதனிடத்தில் மாத்திரம் காண்பதென்பது அறியாமையாகும். இந்த நடத்தையை கடவுள் நமக்குள் அமைத்தார் என்பதும் அர்த்தமில்லாத சொற்களாகும்.

கோரிக்கை (Hope-Ideal) என்பதும் பழக்கத்தால் வரும் குணங்கள். திருடக் கோருவதும், கோயில்கட்டக்கோருவதும், திரவியத்தைச்சேர்க்கக்கோருவதும், வக்கீல் தொழில் புரியக்கோருவதும், கருமம் செய்யக்கோருவதும், சமூக வழக்கங்களே. திருடர் கூட்டங்களில் திருட்டுப்பழக்கத்தால் திருடக்கோருகின்றான். அவனது கோரிக்கை (Ideal) திருட்டே. வணிகர் கூட்டத்தில் பணம் சம்பாதியம் செய்வது அவருடைய கோரிக்கை (Ideal.) கொலை செய்யும் கூட்டத்தில் கொலையே அவரது கோரிக்கை (Ideal) இவ்விதமாக அந்தந்த கூட்டத்தாரின் பழக்கத்தால், அதாவது பழக்க நடத்தையால் அவரவர் கோரிக்கை (Ideals) அமைகின்றன. இத்தியாதி வெவ்வேறு கோரிக்கைகளை கடவுள், அவரவருக்குள் அமைத்தார் என்று வாதிப்பது தயாபரன் என்னும் கடவுளுக்கே அசங்கிதமாகும். ஆசாரங்களை சிருஷ்டித்த கடவுள், அனுசாரங்களையும் சிருஷ்டித்ததாக ஏற்படும்! அத்தகைய கடவுள் இருந்தென்ன? இல்லாமையாலென்ன?

ஆனால் நமது சமயவாதிகள் இந்த ஆபாசநிலைமையினின்று தப்பித்துக்கொள்ள ஒரு சமாதானம் கற்பித்திருக்கின்றார்கள். அதாவது (Free will என்ற சுயமாக நடக்கும் சக்தி மனிதனுக்குள் ஒரு (Faculty) பிரத்தியேகசக்தியாக படைத்துள்ளார். அதனைக்கொண்டு மனிதன் நன்மை, தீமைகளை வகுத்து நடக்கின்றான் என்று வாதிக்கின்றார்கள்.

(தொடரும்)

ஜெயில் சாரணிய சித்திருந்தசங்கம்.

22-12-32ந் தேதி இரவு 9-மணிக்கு மேற்படி சங்க கட்டிடத்தில் தோழர் பி. எஸ். ஷண்முகம் அவர்கள் தலைமையில் கூட்டம் நடை பெற்றது. பல தோழர்கள் அறிய விஷயங்களைப் பற்றி பேசிய பின் சில தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் கலைந்தது என்றுமேற்படி சங்க காரியதரிசி எழுதுகிறார்.

கொழும்பு சுயமரியாதைச் சங்கம்.

5-12-32 திங்கட்கிழமை இரவு சுமார் 9-30 மணிக்கு கொள்ளுப்பிட்டி அல்பர்ட்ரோட்டு 62-நம்பர் கட்டடத்தில் தோழர் எஸ். ஆர். முத்தையா அவர்களின் தலைமையின்கீழ் எட்டாவது மாதாந்திரப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். அக்கிராசனர்முகவுரையாக சுயமரியாதைக் கொள்கையைப் பற்றி சிறிது எடுத்துச் சொன்னார். அதன்பின் தோழர்களான என். எஸ் எம் ஆறுமுகம் அவர்கள் சுயமரியாதைச் சங்கமும், அதன் நோக்கமும் மென்பதைப்பற்றியும் திருச் செல்லம் அவர்கள் பகுத்தறிவு இயக்கமென்பதைப்பற்றியும் தெ. ஈ. புஷ்பராஜன் அவர்கள் நமது கடமை என்பதைப்பற்றியும் வெகு தெளிவாக பொதுமக்கள் உணரும்வண்ணம் எடுத்துச்சொன்னார்கள். பின் பல தீர்மானங்கள் நிறைவேறியபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

பட்டுக்கோட்டை.

இவ்வூர் சுயமரியாதை இயக்கத்தின் உண்மை தொண்டரும், கோகிலை வாசக சாலையின் தலைவரும், பஞ்சாயத்து போர்டு மெம்பருமான தோழர் கே. நாடிமுத்து அவர்களுக்கு 21-12-32 சனிக்கிழமை முற்பகலில் பெண்குழந்தை பிறந்த செய்தி கேட்டு மகிழ்ச்சியடைவதோடு அன்னார் இதுகாலம் வழங்கியபேர்களை வைக்காமல் சீர்திருத்த உலகத்திற்கேற்ற பேர்வைத்தழைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருத்துறைப்பூண்டி.

பங்களாரோ ஜாதாவல் சங்கம்:-

7-1-33 மாலை 5-30 மணிக்குத் தோழர் எஸ். என். மாரியப்பா தலைமையின்கீழ் வருஷாந்திரக் கூட்டமொன்று நடைபெற்றது. அப்பொழுது தலைவர் சங்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றியும் அதன் முக்கிய நோக்கத்தைப்பற்றியும் பேசினார். அதை ஆமோதித்து தோழர் எ. கே. சந்திரசேகரன், டி. சி. ராமைய்யா, எம். ஷேக்அப்துல்காதர் முதலியவர்கள் பேசினார்கள். பிறகு சில அங்கத்தினர்களால் சுயமரியாதைக் கீதங்கள் பாடிக் கூட்டம் முடிவுபெற்றது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

மதிப்புரை

கொழும்பு ஹஸைனிய சங்கத்தாரால் வெளியிடப்படும் ஒற்றுமை என்ற தமிழ் மாதாந்திரப்பத்திரிக்கை ஒன்று மதிப்புரைக்காக வரப் பெற்றோம். பொதுவாய் இஸ்லாமியர்களின் ஒற்றுமைக்காகவும், முன்னேற்றத்திற்கும் பெரிது உழைக்கப் போவதாய் தெரிய வருகிறது. அதன் வருட சந்தா ரூ 1 வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசதிற்கு எழுதவும்:—

Publishers:—
The Majlisul Hassiniyah
Publishing Society,
No 70 Wolfendhal St,
COLOMBO

தோழர் எம். அப்பாசாமி முதலியார்.
சென்ற மார்கழி மாதம் 26உ காலஞ்சென்றார். இவரின் இறுதிச்சடங்கு 23—1—33ல் செங்கற்பட்டில் நடைபெறும்.

சென்னையில் சுயமரியாதைப் பிரசாரம்.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் பொதுக் கூட்டமொன்று 15—1—33 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு சென்னை ஜியார்ஜ் டவுன் வேணுகோபால் செட்டி நந்தவனத்தில் "ஆனந்த போதினி" ஆசிரியர் தோழர் எல். இராமசாமி அவர்கள் தலைமையில் நடை பெற்றது.

தோழர் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல்., அவர்கள் 'சமதர்ம இயக்கம்' என்பது இன்னதென்றும், அதை மனிதன் அவசியம் அனுஷ்டிக்க வேண்டிய காரணமும், அதனால் மனித சமூகத்திற்கு வரும் நன்மைகளும் வெகு தெளிவாக மக்களுக்கு எடுத்துக்கூறினார்.

தோழர்கே.முத்துசாமிவல்லத்தரசு பி. ஏ. பி. எல். அவர்கள் அதை ஆமோதித்துக் கூறுகையில் சமதர்மக் கொள்கைகளை அவசியம் அனுஷ்டிக்க வேண்டு மென்றும், அதனால் மனித சமூகத்திற்கு யாதொருவிதமான கெடுதல் இல்லை யென்றும், அப்படி அதற்கு எதிர்ப்பும், கெடுதியும் ஏற்பட்டால் அதை ஏற்கக் கொள்ளத் தயாராயிருக்க வேண்டுமென்று விபரமாக எடுத்துக் கூறினார்.

பின்னர் தோழர் எஸ். குருசாமி பி. ஏ. அவர்கள் சமதர்ம இயக்கத்திற்குமுட்டுக்கட்டையாகவும், ஏமாற்று வித்தைகளாகவும் எவை இருக்கின்றன? அவைகள் தன்மை எத்தன்மையானது? பிரம்மாவின்முகத்தில் பிறந்தவர்கள் எப்படி நம்மை விஷமப் பிரசாரம் செய்து ஏமாற்றுகின்றனர் என்பது பற்றியும் விரிவாக நெடு நேரம் பேசினார்.

தோழர்களான எஸ். வி. லிங்கம், டி. எம். பார்த்தசாரதி ("தொழிலாளி" ஆசிரியர்) தொழிலாளி விடுதலைக்குச்சமதர்ம இயக்கமே சரியான நிவாரண மார்க்கமென்றும் மேற்படி இயக்கத்தினால் தான் தொழிலாளிகள் விடுதலை அடைய முடியுமென்றும் மிக ஆர்வமுடன் பேசினார்கள். தவிர பத்திரிகைகள் தொழிலாளிக்கு விரோதமாக எப்படி விஷமப் பிரசாரம் செய்கிறது என்பது பற்றியும் விபரமாகச் சொன்னார்கள். தொழிலாளியின் பெயரால் முதலாளி எப்படி கொள்ளையடிக்கிறானென்றும் எடுத்துக் காட்டினார்கள்.

பின்னர் தலைவர் அவர்களால்பின்னுரை சுருக்கமாகக்கூறப்பட்டு மன்றத்தின் காரியதரிசி தோழர் எஸ். ரங்கநாதன் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகினார்.

அம்மனூர் பொதுநல ஊழியர் சங்கம்.

இச்சங்கம் 15-1-33 காலை 9மணிக்கு திருத் தருப்பூண்டி தாலூகா அம்மனூர் மாரியம்மன் கோவிலினெதிரே திறந்த வெளியில் தோழர் கு. க. சதாசிவம்பிள்ளை தலைமையில் நடை பெற்றது. பல அன்பர்கள் பல விஷயங்களைப் பற்றி பேசினார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோவை அருந்தியர்கள் கூட்டம்.

கடந்த 14-1-33ல் மேல்படி சபையாரின் கூட்டமொன்று கோவை சுயமரியாதை வாலிப சங்கத்தலைவர். தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் லண்டன் மிஷன் கென்வின் பாடசாலைக்கட்டிடத்தில் சமூக முன்னேற்ற சங்கத்தின் அவசியம் எனும் பொருள் பற்றி உபன்யாசம் நடந்தது. தலைவர் சுமார் 1-மணிநேரம் மேற்படி விஷயத்தைப்பற்றி பேசினார். அதைத் தழுவி தோழர் ஆர். நஞ்சையா முனிசிபல் கவுன்சிலர் அவர்களும், எம். சின்னசாமி அவர்களும், கிஷன், ரங்கசாமி, சந்தானம் முதலியவர்கள் பேசினார்கள். இரவு 10-30 மணிக்கு தலைவருக்கு வந்தனோபசாரம் செய்து கூட்டம் முடிந்தது.

என ஒரு நிருபர் எழுதுகிறார்

திருச்செங்கோடு வாலிப சகவாச சங்கக்கட்டட அமைப்பு வேண்டுகோள்

சுயமரியாதையின் லக்ஷியத்தையே லக்ஷியமாய்க்கொண்டு நடைபெற்று வரும் திருச்செங்கோடுவாலிபசகவாச சங்கத்திற்கு ஒருசொந்தக்கட்டடம் நிலைநாட்டுவதின் நிமித்தம் அங்கத்தினர்கள் வெளியூர்களிலுள்ள இயக்கத் தோழர்கள் பால் நன்கொடை பெறுமாறு புறப்பட உத்தேசித்துள்ளோம். ஆகையால் இம்முயற்சியில் அனுதாபமுடைய ஒவ்வொருவரும் தம்மாலியன்ற பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்

T. A. கைலாசம்,
காரியதரிசி.

பார்ப்பனியம் ஒழிந்த இறுதிச்சடங்கு

இந்நகர் ஜில்லாபோலீஸ் சூப்பரின்டென்டெண்டு அவர்களின் கியாம்பு கிளார்க்கு (Camp Clerk) தோழர். பா. சீனுவாசம் பிள்ளை அவர்களின் புதல்வன் இறந்ததை முன்னிட்டு இன்று காலைஅவருடைய வீட்டில் சுமார். 200 (இருநூறு) பார்பனரல்லாத ஏழை மக்களுக்கு யாதொரு சாதி வித்தியாசமுமின்றி உணவு கொடுக்கப்பட்டதென மஞ்சக்குப்பம் நிருபர் எழுதுகிறார்.

வாலாஜாபாத் இந்து மதபாடசாலை.

ஓர் அனுதாபக் கூட்டம்.

வாலாஜாபாத் இந்து மதபாடசாலையில் அதன் அங்கத்தினர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், இன்று மாலை 4மணிக்குக் கூடினார். அச்சமயம் தோழர் வீரராகவாச்சாரியார் தலைமை வகித்தார். தலைவர், காலஞ்சென்ற தோழர் அப்பாசாமி முதலியார் அவர்கள் இப்பாடசாலைக்கு ரூ 150 நன்கொடையாக அளித்திருக்கிறாரென்றும், அவர்தருமமே உருவாகக் கொண்ட மிகக் கண்ணியமுள்ள பெரியாரென்றும், இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்குஅதிக அவாக்கொண்டுள்ள பெரியாரில் ஒருவர் என்றும் கூறினர். அவர்கள், இம்மண்ணுலக வாழ்வை வெறுத்து, வீண் ஏகியது அளவிறந்த வருத்தத்தை உண்டுபண்ணுகிறது என்றும், இன்று சின்னாள் உயிரோடிருக்கப் பெறாதது பள்ளிச சாலையின் குறைவென்றும் பேசினர். என ஒரு நிருபர் எழுதுகிறார்.

பவானியில் சுயமரியாதைப் பிரசாரம்

15-1-33 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30. மணிக்கு செல்லியாண்டியம்மன் கோவில் முன்பாக உள்ள மைதானத்தில் தோழர் ஜெயவீர சிங்கநாவலர் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பொதுக் கூட்டம் நடை பெறறது. சுமார் 300 ஜனங்கள் குழுமியிருந்தனர். 6வயதுள்ள சிறுவன் கிருஷ்ணன் சபையோர் வியக்கும் வண்ணம் சுயமரியாதை சமதர்மப் பாடல் பாடிய பிறகு தலைவர் தன் முன்னுரைகூறியமர்ந்த பின் தோழர்களான அ. இராகவன், அ இரத்தினசபாபதி ஆகிய இருவரும் "சுயமரியாதைக் தத்துவங்கள்" என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தியபின் தலைவர் சில வார்த்தைகள் கூறிவிட்டு பின் சுயமரியாதைச் சமதர்மக் கட்சியின் திட்டங்களை வாசித்து அதை ஆதரிக்கும்படி வேண்டிக் கொண்டதுடன் இங்கு ஓர் சுயமரியாதைச் சங்கம் நிறுவும்படி கேட்டுக் கொண்டதன் இரவு 7-30-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது. (ஒரு நிருபர்)

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1928 ஹூ அசல் நெ. 1117.
1932 ஹூ விண்ணப்ப நெ. 2252

பல்லடம் தாலூகா சூலூரிலிருக்கும் காட்டுக்கோட்டை க. மு. அ. முத்தளகஞ் செட்டியார் ... வாதி.

ஷை தாலூகா கோடங்கி பாளையம் மஜரா காரணம் பேட்டையிலிருந்து இப்போது கோயமுத்தூர் தாலூகா கணபதியிலிருக்கும் காரணம் பேட்டை உப்பிலியர்தோட்டம் காளியப்ப கவுண்டன் மக்கள் நஞ்சப்ப கவுண்டன் 1. இப்போது கோயமுத்தூர் தாலூகா பீளமேட்டில் ராதாகிருஷ்ணா மில்லில் கூலிவேலைசெய்யும் மாரப்பகவுண்டன் 3. இப்போது பல்லடம் தாலூகா கரடாம்பாடியில் ராயகவுண்டன் மகன் மொட்டைய கவுண்டன் தோட்டத்தில் வேலை பார்க்கும் சின்னிய கவுண்டன் 4. ஷை காரணம்பேட்டையிலிருக்கும் பழனிக்கவுண்டன் 5—2-முதல் 5—பிரதிவாதிகள்.

ஷை நெம்பரில் ஷை 2-முதல் 5-பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதும், வாதியால் தீர்ப்புக்கு முன் உடன் ஜப்தி செய்யப்பட்டிருப்பதுமான ஸ்தாவர சொத்துக்களை ஏலம் போடவேண்டுமென்று மனு செய்துகொண்டிருப்பதால் ஏல இஸ்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்காக 1933 ஹூ ஜனவரி மாதம் 27-ந்தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது என்றுதெரிவிக்கப்பட்டிருக்கிறது

S. கணபதி அய்யர் பி. ஏ. பி. எல்.
Pleader for Decree Holder,
திருப்பூர 16-1-33.

12-8-0ரூ-க்கு 5000 ரூ. பெறலாம்.

நாஷனல் இண்டியன் டொனேஷன் பண்ட்ஸ் ஆலப்புழை.

ஒவ்வொரு வருடத்திலும் 40000 ரூ. சன்மானங்கள்
1-ம் சன்மானம் 5000 ரூ. 2-ம் சன்மானம் 2000 ரூ.
மரணப்பண்டு 500 ரூபாய்வரை.

தமிழ் ஜில்லாக்களில் 50 ரூபாய் சம்பளத்தில் ஆர்கனைசிங் இன்ஸ்பெக்டர்களும் கமிஷன் ஏஜண்டுகளும் தேவை. ஸ்டாம்புடன் எழுதுங்கள்.

மானேஜிங் டைரக்டர்,

National Indlan Insurance Co., Ltd., Alleppey.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தில் அவர்களுக்குச் சிறிதும் சுதந்திரம் இல்லாமலிருந்ததால் அதை வெறுக்கின்றதையும் பார்த்தேன்.

அன்றியும் தாங்கள் இங்கிலீஷ் பேசுவதாக நினைத்துக்கொண்டு பேசும் ரஷியர்கள் ஒவ்வொருவரும் அமரிக்க பாஷையைப் பேசுவதையே பார்த்தேன், அதாவது ரஷியர்களின் இங்கிலீஷானது அமரிக்கர்கள் பேசும் இங்கிலீஷ் போலவே இருந்தது. இதர ஐரோப்பியர்களும் இவ்விதம் தான் நடந்து கொள்ளுகிறார்கள். அதாவது அவர்கள் பேசும் ஆங்கில பாஷைகள் இப்படித்தான் இருக்கின்றன. நான் ரஷியாவுக்கு சென்று திரும்பும் பொழுது பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், போலண்டு முதலிய தேசங்களின் வழியே பிரயாணம் செய்தேன். இந்த ஒவ்வொரு தேசங்களிலும் நான் உத்தியோக தோரணையில் ஆடம்பரமாக வரவேற்கப் பட்டேன். ஆனால் ஒவ்வொரு தேசத்திலும் அமெரிக்கர்களே எல்லோருக்கும் முன்பாக வந்து அமெரிக்கர் என்கின்ற முறையில் என்னை வரவேற்பதாக சொன்னார்கள்.

ஆகவே எங்கு பார்த்தாலும் அமெரிக்கர்கள் இவ்வளவு செல்வாக்காய் இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

நீங்கள் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் உங்கள் சொந்த நாட்டில் இருப்பது போலவே நடந்து கொள்ளுகிறீர்கள்.

அங்கங்கு என்னை வரவேற்க முன் வந்த அந்தந்த நாட்டுப் பிரமுகர்களான சுதேச மன்னர், அரசாங்க தலைவர், மந்திரிமார்கள், பிரதம பாதிரிகள், உயர்தர கல்வி ஸ்தாபனங்களின் தலைவர்கள் முதலிய எல்லோருமே சிறிது காலத்திற்கு முன் அந்தந்த நாடுகளுக்குச் சென்ற அமெரிக்கர்களாகவே இருந்தானது எனக்கு மிகுதியும், சந்தோஷமாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. இதைப்பற்றி நான் குற்றம் கூற முன் வர வில்லை. ஆனால் அதைக் கண்டு நான் திருப்தியும் மகிழ்ச்சியும்அடைகிறேன்.

பிறகு, நீங்கள் முன் சென்ற அமெரிக்கர்களுடன் சேர்ந்து கொள்ளாமல் ரஷியாவுக்கு போவதாயிருந்தால் நான் எனதுஅநுபோகங்களில் சிலவற்றை உங்களுக்குச் சொல்லுகின்றேன். அவைகள் உண்மை தானா என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளக் கூடும்.

நீங்கள் நல்ல ஒரு உழைப்பாளியாகவும் யந்திரத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் தகுந்த பருவமும் நல்ல குணமும் ஒழுக்கமும் உடையவர்களாயும் (ஏனென்றால் ஒழுக்கத்தைபற்றி ரஷ்யர்களுக்குமிக கவலை உண்டு.) இருந்தால் உங்களுக்கு எவ்வித கஷ்டமும் இருக்காது. அவர்கள் உங்களை வரவேற்பதற்கு மிகுதியும் மகிழ்ச்சியே யடைவார்கள்.

எல்லா தேசத்திய உண்மை உழைப்பாளிகளையும் நன்றாய் வரவேற்க ரஷியர்கள் ஆவலாகவேஇருக்கிறார்கள்.

நீங்கள் வெறும் பணக்காரர்களாய் மாத்திரம் இருந்து வேறு ஒரு காரியத்திற்கும் உதவா சோம்பேறிகளாய் இருந்தாலும் கூட. உங்களுடைய பணங்களை எல்லாம் ரஷியாவிலேயே செலவிடும்படியாய் செய்து உங்களுக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்து கொடுப்பார்கள். நீங்கள் தினம் 1க்கு 15 ரூபாயாவது செலவு செய்தாக வேண்டும். நீங்கள் மிகவும் லோபித்தனமாய் இருந்து நாள் ஒன்று 15 ரூபாயிக்கு குறைவாக செலவு செய்தால் நீங்கள் அங்கு இருந்து திரும்புவதற்கு முன்னதாகவே அந்த வித்தியாசத்தை செலுத்தும்படி செய்து விடுவார்கள். ஆகையால் அங்கு சென்ற பிறகு அவர்கள் குறிப்பிட்ட தொகைக்கு குறைவாய் செலவு செய்யப் பார்ப்பதில் ஒன்றும் பலன் ஏற்படாது என்பதோடு உங்களை மரியாதையாகவும் நடத்த மாட்டார்கள். அமெரிக்கப் பெண்ணாய் இருந்தாலும் கூட சிறிதாவது லோபமாய் இருந்தால் மதிக்கவே மாட்டார்கள். நீங்கள் ரஷியாவுக்கு சென்றால் அவர்கள் உங்களை ஒரு வெறுப்புடனும், பரிதாபத்துடனும், தான் பார்ப்பார்கள். ஏனென்றால் நீங்கள் உங்கள் நாட்டில் பொதுவுடைமைக் கொள்கையைப்பரப்ப முயற்சித்துப் புரட்சி செய்யாததால் வெறுப்பும், சுதந்திரமும், பொதுவுடைமைக்கொள்கையும், இல்லாத ஒரு அடிமை தேசத்தில் இருந்து வாழ இஷ்டப்படாமல் தங்களிடம் அடைக்கலம் புக வந்திருப்பதற்காக இரக்கமும், அனுதாபமும், கொள்ளுவார்கள். தன் இனத்தைவிட்டுத்தப்பிப்பிரிந்து உணவுக்கு அலையும் ஒரு குரங்கினிடம் அன்பாகவும், நேசமாகவும், இருப்பதுபோல் உங்களிடம் இருப்பார்கள். ஆனால் எதுவும், நீங்கள் அங்கு நடந்துகொள்ளும் நடவடிக்கையைப் பொருத்து இருக்கின்றது என்பதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் ஒழுங்காய் நடந்துகொண்டால் உங்களை அவர்கள் அந்தரங்க நண்பர்கள் போலபாவித்து அவ்விடத்திய வாழ்க்கையின் சகல துறைகளையும், உங்களுக்கு வெளிப்படையாக காட்டுவார்கள். உங்களைப்போல் அவர்களுக்கு குழந்தை குட்டிகள் தொல்லை, வரி, வட்டி வாடகைமுதலியவைகளைப்பற்றிய கவலைசிறிதும் கிடையாது. ஆதலால உங்களுடன் நேசமாய், சமசுதந்திரமாய் வாழ்க்கைநடத்துவதில்அவர்களுக்கு சிறிதும் கஷ்டம் இருக்க நியாயமில்லை.

அவர்கள் தங்கள் பொதுவுடைமைக்கொள்கை வாழ்க்கையைப்பற்றி மிகவும் திருப்தியும், பெருமையும், கொண்டிருப்பதால் அவற்றின் சகல ஸ்தாபனங்களையும், அவற்றின் நடப்புகளையும், உங்களுக்கு காட்டுவதைப்பற்றியும், விளக்குவதைப்பற்றியும், மகிழ்ச்சியுடனும், ஆவலுடனும், முன்வருவார்கள்.

ஆனால், நீங்கள் மாத்திரம் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். மனுஷ 'சுபாவம் என்பது இங்குள்ளதுபோலவே ரஷியாவிலும் இருக்கும் என்று எண்ணிவிடாதீர்கள்.

உங்கள் (அமெரிக்கா) அம்பாசிடர் (Dawes) டாவ்ஸ், என்னிடம் ஒரு நாள் பேசிக்கொண்டிருந்தபோது உங்களுடைய ஸ்தாபனங்களைஎப்படி மாற்றியமைத்த போதிலும், உங்களுடைய மனித இயற்கைத்தன்மையை மாற்றி அமைக்க முடியாது'' என்று சொன்னார். ஆகவே நீங்கள் ரஷியாவிற்கு செல்லுமுன் மனித சுபாவத்தைப்பற்றி விஞ்ஞான முறைப்படி (இயற்கை அமைப்புப்படி) நன்றாய் அறிந்துகொள்ளவேண்டும்.

மனித சுபாபத்தை கற்றுக்கொள்வது என்பது சுலபமான காரியம் அல்லவானாலும் அதுமாறுபடக்கூடியதல்லவானாலும், ஒரு அளவுக்கு அறிந்தாக வேண்டும் அதாவது ஒரு களிமண்ணின் இயற்கைத் தன்மை சுலபத்தில் மாற்றமுடியாது. ஆனால் அக்களிமண்ணைக்கொண்டு செய்யப் படுகின்ற சாமான்கள் விஷயத்தில் நம் இஷ்டம்போல் எப்படிப்பட்ட சாமான்கள் வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் களிமண்ணின் முக்கியதன்மை எங்கும் ஒன்று போலவே இருந்தாலும், பூசாரத்தில் அதன் இயற்கை கூட்டால் சில இடத்துமண் சற்று மிருதுவாகவும், சிலது கெட்டியாகவும் இருக்கலாம். அது போல மக்கள் சுபாவம் எங்கும் ஒன்று போலவே இருந்தாலும், அமரிக்க மக்கள் சுபாவத்திற்கும், ரஷிய மக்கள் சுபாவத்திற்கும், சிற்சில விஷயங்களில் சிறிது வித்தியாசம் காணப்படலாம். இவையெல்லாம் அவனவனுடைய சுபாவம், பழக்கம், வழக்கம் முதலியவைகளைப்பொருத்து இருக்கிறதேதவிர வேறில்லை. எப்படியெனில் அமரிக்காவில் பெருமையாகவும், ஆனந்தப்படக்கூடியதாகவும், கருதும்படியான ஒரு காரியம் ரஷியாவில் இழிவான குற்றமாகக்கருதக்கூடியதாய் இருக்கும்.

உதாரணமாக ஒரு அமெரிக்கன் ரஷியாவைப்பார்த்து அதைப் பற்றி நினைக்கும்போது ரஷியாதேசமானது சகல வளப்பங்களும் இயற்கையிலேயேபெற்று இருக்கும் தேசமாகவும், பணம் சேர்த்து கோடீஸ்வரனாவதற்கு மிகுந்த தகுதியுள்ள தேசமாகவும், தோன்றும். மற்றும் நாணய மாற்றைப் பார்த்தவுடன் பணத்தை குவித்துவிடலாம் என்று ஆசைஉண்டாகும். மேலும் கூலியோ மிக சொற்பம் இலாபமோ மிக அதிகம் இவ்வளவு லாபமும் ஒரு மனிதன் அந்தத்தொழிலை நடத்தி தன் சொந்த பணக்காரனாகாமல் சர்க்கார் அடைந்து வீணாக்கப் படுகின்றதே! வீணாக இவ்வளவு லாபத்தையும் பொது ஜனங்களுக்காகச் செலவு செய்து விடுவதில் என்ன பலன் இருக்கிறது? வியாபார முறையும், பணம் சேர்க்கும் தன்மையும் இல்லாமல் போகின்றதே.'' என்று வருத்தப்படுவான். எதைப் போல் என்றால் ஒரு காலத்தில் அமெரிக்க பொருளாதார வாதி ஒருவர் சொன்ன மாதிரியாக ''பொதுஜனங்களைக் குப்பையில் தள்ளுங்கள். ஒவ்வொரு மனிதனும் அவனவன் காரியத்தில் கண்ணாயிருந்தால் தான் பணம் சேருமே ஒழிய பொதுநலம் பொதுக் காரியம் என்று கருதினால் பணம் சேரவே சேராது'' என்று சொன்னார். அப்படித்தான் எல்லாஅமெரிக்கனும் நினைப்பான்.

இந்த முறையை நீங்கள் ரஷயாவில் கையாண்டீர்களானால் நீங்களும் வெகு சீக்கிரத்தில் பணக்காரர்களாகலாம் ஆனால் இந்த விஷயங்கள் அந்த நாட்டு வருமானவரி அதிகாரிகள் காதுகளுக்கு எட்டி விடுமேயானால் உடனே ரகசியப் போலீசை விட்டு நீங்கள பணம் சேர்த்த வழியையும் முறையையும் நன்றாய் விசாரித்துத் தப்பு அறிந்து அறிக்கை அனுப்பச்சொல்லுவார்கள். பிறகு ஒரு ஆசாமி வந்து உங்கள் பிடனியில் ஒரு அறை கொடுத்துத் தள்ளிக் கொண்டு போய் ஒரு பேர் பெற்ற கடினமான குற்ற விசாரணை ஸ்தலத்தில் நிறுத்துவான். அங்கு வியாபார முறையையும், மனித சமூக வாழ்க்கையைப்பற்றிய உமது கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் விளக்கும்படி கேட்பார்கள்.

அது சமயம் உங்களது அமெரிக்க வர்த்தக முறைகளைப் பற்றியும் தனி நன்மையைப் பற்றியும், சுயநலத்தின் நற்பயன்களைப் பற்றியும், எவ்வளவு உங்களால் அனுசரித்து பேசி நிலை நிறுத்த முடியுமோ அவ்வளவையும் பேசவிடுவார்கள். உங்களை யாதொரு குறுக்கு விசாரணையும் செய்ய மாட்டார்கள், அவமதிக்கவு மாட்டார்கள், யாதொரு தொந்தரவையும் கொடுக்க மாட்டார்கள். நீங்கள்எல்லாவற்றையும் சொல்லிமுடித்தவுடனேமறு உலகம்என்று ஒரு உலகம் இருந்தால் அதைக்காணுவீர்கள். அப்படி ஒரு உலகம் இல்லாவிட்டால் உங்களுடைய இவ்வுலக வாழ்வானது முடிவடைந்த பேற்றை பெருவீர்கள். மற்றும் அவர்கள் உங்கள் சுற்றத்தாருக்குஉங்களைப் பற்றி இனிமேல் யாதொரு கவலையும் பட வேண்டா மென்றும், மறுபடியும் நீங்கள் திரும்பி வீடு வந்து சேர மாட்டீர்களென்று மிகவும் வணக்கமாகவும் மரியாதையாகவும், ஒரு கடிதம் எழுதி தெரிவித்து விடுவார்கள்.

இது ஒரு தண்டனை என்றோ அல்லது ஒரு குற்றச் சட்டத்திற்கு சம்பந்தப் பட்ட தென்றோ நீங்கள் கொஞ்சமும் நினைக்க வேண்டாம். இரஷியா மக்கள் ''பேதைகள் இருப்பதை விட இறப்பதே மேல்'' என்று நினைக்கஉருவெடுத்தவர்களாவார்கள். பேதை (Idiot) என்னும் பதத்திற்கு(கிரீக் பாஷையில்) தன்னையன்றி மற்றவர்களைப்பற்றி கவலைப்படாதவன் எனப்பொருள் உண்டு. ஆகவே உங்களது வாழ்க்கையின் நோக்கங்களானது உங்களை பேதைகளென்று சொல்லுவதற்கு போதுமான ஆதா

ரம். ரஷியர்களுக்கு இருக்கிறது. உங்கள் மேலும், உங்கள் சமூகத்தின் மேலும் இருக்கும் பரிதாபத்தால் தான் உங்களுக்கு யாதொரு தொந்தரவையும் கொடுக்காமல் உங்களை இவ்வுலகிலிருந்து பிரித்து விடுவார்கள்.

நான் அனேக வருஷங்களுக்கு முன் சொன்ன ஒரு யோசனையைத் தான் அவர்கள் (ரஷ்யர்கள்) இப்பொழுது நிறைவேற்றுகிறார்களே ஒழிய புதிது ஒன்றும் இல்லை. நாகரீகமடைந்த சமூகத்தில் பிழைக்கும் ஒவ்வொரு மனிதனும்,-அச்சமூகத்தின் ஆதரவையும், நன்மைகளையும் குழந்தைப் பருவம் முதல் அனுபவித்து வந்த ஒவ்வொருவனும், தான் இனி இவ்வுலகில் வாழ்வதால் அச்சமூகத்திற்கு என்ன பயன் உண்டு என்பதை ஒரு நீதிபதி முன் எடுத்துக் காட்டுவதன் மூலம் மக்களை திருப்தி செய்பவனாய் இருக்க வேண்டும். அப்படி அவர்களை திருப்திசெய்யமுடியாவிட்டால், அச்சமூகத்திற்குத்தொந்தரவையும் இடைஞ்சலையும் கொடுக்காமலாவது இருக்க இவ்வுலகிலிருந்து பிரிந்தாவது விட வேண்டும். ஒரு நாட்டுக்கு பொறுப்பும், உத்திரவாதமும் உள்ள மக்களை உண்டாக்க இதைவிட வேறு வழியில்லை. ரஷிய பொதுவுடமைச் சங்கங்கள் இவ்வளவு வெற்றி பெற்றிருப்பதற்குக் காரணம், ஒவ்வொரு ரஷியனும் தன் வாழ்க்கையினால் தன் தேசத்தவனுக்கு தக்க நன்மையை உண்டாக்காவிட்டால், தான் உயிரையே இழக்க நேரிடும் என்று நன்றாய் அறிந்ததேயாகும். (தொடரும்)

கொக்கோகம்.

அதிவீர ராமபாண்டியன் பாடிய மூலமும் உரையும் கலிகோ பயிண்ட் 64 வகை சித்திரங்களுடன் ப அசல் கிளேஸ் போட்டோ படங்கள், சதிபதிகளும் தனிமாதர்களும் சேர்ந்த தனி கட்டடத்தோடு இரண்டு ரூ. 5-0-0

வெளி நாட்டினர் ரூ. 5 8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

T. G. பாக்கியம் & கோ.
வேப்பேரி, சென்னை.

குஷ்டம்

வெண்குஷ்டம் பத்து.

சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 1- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்,

Post Box No- 11413
Calcutta- (k)

கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. அதற்காக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

... Works
... Calcutta

ANANGARANGABATIKA

(Enjoyment Pill)

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of failure Price for 60 Pills Rs. 8 Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

"SAILASRAM" (K)
Chandanpur,
(Khulna) E. B. R.

ஓ! பலந்தன்றியவர்களே! தாதுபுஷ்டியில்லாதவர்களே! கிழத்தன்மையடைந்தவர்களே!

இதோ சாப்பிடுங்கள்!

தங்கபஸ்பம்

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார தாது புஷ்டியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது; பத்தியமில்லை. நாட்பட்ட அல்லது புதிதாயுண்டான எல்லாவியாதிகளையும் நீக்கி ஆண்மைத்தனத்தை உண்டாக்கி தாதுபுஷ்டியைக்கொடுக்கும்.

48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆபரேஷன் அவசியமில்லை. முளை தானே கரையும், சீழ் மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும் உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

தாளக பஸ்பம்- இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8 வித காசமும் அவசியம் தீரும் அனுபவத்தில் கைகண்டது. புட்டி 1-க்கு ரூ. 4.

அப்ரேக் செந்தூரம் - நீரழிவுக்கு

ஜாஸ்திபோகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக கொதிப்பை மாற்றி ரத்த விர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகலமேகமும் நீங்கும். தளுக்கற்றது. புட்டி 1-க்கு ரூ. 15 வி. பி வேறு.

வைத்திய ஆசிரியர் **மலையப்பசாமி,**
வைத்தியசாலை, பழனி, S. I.,

டாக்டர்

சிங்காரம் அவர்களின்

மஹா சந்தனாதித்தைலம்.

(ரிஜிஸ்டர்டு)

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்குஇத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகு நோய்கள்.

கண் எரிச்சல்	பீனிசம்
கண் சிவப்பு	தலை மயக்கம்
கண்ணில் நீர்வடிதல்	தலைப் பொடுகு
கண் அரிப்பு	சொரி சிரங்கு
கண் பார்வைக்குறைவு	தலைமயிர் உதிர்தல்
கண் கூச்சம்	நாள்பட்ட தலை நோய்
கண்ணில் பீளை சாருதல்	முதலிய பல வியாதிகளை ஆச்ச
மேக நீர், வெள்ளெழுத்து	ரியமாய் குணம் செய்யும். சரீ
ஒருதலை நோய்	ரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்
கை கால் எரிச்சல்	தையும் நீக்கி குளிர்ச்சியைக்
மூலச்சூடு	கொடுக்கும். ஆண் பெண் யா
அதிதாகம்	வரும் ஸ்நானம் செய்யலாம்.
வெட்டைச்சூட்டால் உண்டாகும் நீரெரிச்சல்	பத்தியமில்லை.
காது நோய், காது மந்தம்	24 அவுன்ஸ் டின் ரூ. 4-0-0
மண்டை இடி	12 ,, ,, ரூ. 2-2-0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்டு. திருச்சிராப்பள்ளி.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	சிதம்பர ரகசியம்	...	0—8—0
2.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை		0—4—0
3.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை		0—8—0
4.	ஆராய்ச்சி அணிகலம்	...	0—12—0
5.	சுயமரியாதை தத்துவ கீதங்கள்	...	0—4—0
6.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை		0—6—0
7.	மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்)	...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு	...	0—1—0
	சாமிகளின் அடிமைகள்	...	0—12—0

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)
விலை ரூ. 1—0—0
"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

Ready for Sale! Ready for Sale!!

The Crux of the Indian Problem
By Dr. Paranjpye M. A., D. Sc.

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvenation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God. Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print. Well gotup. Neatly bound.

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

Kudi Arasu Book Depot. Erode.

அதிர்ஷ்டம் மாத்திரமல்ல
அறிவுதானம் செய்த பலனுமுண்டு.

பச்சையப்பன் கலாசாலை

லாட்டரி.

ரூ. 1,00,000. பிரைஸ்கள் 3059. முதல்பிரைஸ் ரூ. 20,000
ஒரு டிக்கட் விலை. ரூ. 1
முடிவாகும் தேதி 30-6-33. எடுக்கப்படும் தேதி 31-7-33.
மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

காரியதரிசி,
வி. திருவேங்கிடசாமி எம். ஏ.
பச்சையப்பன் ஹாஸ்டல், சேத்துப்பேட்டை, மதராஸ்.

Goshaye office pillss.
கோஷாயி
ஆபீஸ் மாத்திரை

Dr. T. K. V. Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

Proprietor. T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ethiraj Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டிரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள்நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

Read.
The 'Citizen'
and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

மதத்தை ஒழிப்பது
உயர்வு தாழ்வை ஒழிப்பதாகும்.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றுக்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

கடவுளும், பிரபஞ்சமும்.

'கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0 8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

மநுநீதி மருமம்.

விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.